ஏகத்துவமும் எதிர்வாதமும்

CC9-360

மௌலவி எஸ். அப்துல் வஹ்ஹாப் (பாகவி)

வினா: ஏகத்துவம் என்றால் என்ன?
விடை: இது ஒரே வார்த்தையில் பதில் சொல்லத் தகுந்த கேள்வியல்ல. உள்ளே வாருங்கள். ஏகத்துவம் குறித்து விரிவாக உரையாடுவோம்.

கிடைக்குமிடம்
[illegible] புக் டிப்போ,
மெயின் ரோடு,
உத்தமபாளையம்.
மதுரை மாவட்டம்.

வெளியிடுவோர்:
தம்பி புக் சென்டர்
15, ஏழுகிணற்று தெரு,
சென்னை-1.

PDF ISLAM

பதிப்புரிமை பெற்றது.

முதற் பதிப்பு: அக்டோபர் '63.

இரண்டாம் பதிப்பு டிஸம்பர் '72

விலை ரூ. 1-25

PDF ISLAM

முன்னுரை

'அனைத்தையும் படைத்து ஆள்கிறவனும் மனிதனின் வணக்கத்திற்குரியவனும் ஒரே இறைவன்தான் என்ற கொள்கையையே நாம் ஏகத்துவம் என்று குறிப்பிடுகிறோம். இது மனித இனத்திற்குப் புதியதொரு கொள்கையல்ல. இறைவனிடமிருந்து மனிதனுக்கு முதல் மதம் எப்போது அருளப்பட்டதோ அப்போதே ஏகத்துவம் மனித இனத்துக்கு அறிமுகமாகிவிட்டது. அதற்குப் பின்னர் அருளப்பட்ட இறை வேதங்கள் அத்தனையும் தொடர்ந்து ஏகத்துவத்தை வலியுறுத்தின.

என்றாலும், எங்கும் நிறைந்த இறைவனே அண்ட சராசரத்தில் நடக்கும் அத்தனைக்கும் பொறுப்பாளி என்ற ஏகத்துவக் கொள்கை, நாளடைவில் மக்களின் மனத்திலிருந்து நழுவத் தொடங்கியது. ஏனெனில் அவர்கள் நெருப்பு, காற்று, மழை, முதலான இயற்கைச் சக்திகளைக் கண்டார்கள். அவை ஒவ்வொன்றுக்கும் அவர்கள் ஒவ்வோர் இறைவனை ஏற்படுத்தினார்கள். அவை அனைத்துக்கும் அடிப்படையான இறைவனைப் புறக்கணித்தார்கள்.

எனவே, நல்ல மார்க்கத்தைப் போதித்து, அதன் மூலம் மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்காக அருள்பாலிக்கப்பட்ட அறிஞர்

PDF ISLAM

கள் ஏகத்துவத்தை எடுத்து வைத்து விளக்கினார்கள். ஏகத்துவத்திற்கு எதிராக மக்கள் எழுப்பும் வினாக்களுக்குத் தெளிவாக விடை கொடுத்தார்கள். இப்படி வினா-விடை ரீதியாக எழுதப்பட்டிருக்கும் நூல்கள் அரபி மொழியில் குவிந்து கிடக்கின்றன. இப்படி வினா—விடை ரீதியாகஇமாம் கஸ்ஸாலி எழுதிய இரண்டொரு நூல்கள் உலகப் பிரசித்தம் வாய்ந்தவை. தமது மாணாக்கர்கள் எழுப்பிய வினாக்களுக்கு மௌலானா ரூமி கொடுத்த விடைகள் இன்றைக்கு நூலுருத் தாங்கி வெளிவந்திருக்கின்றன.

இவ்வாறு ஏகத்துவத்தின் உச்சியில் நின்று விளக்கம் கொடுத்த அறிஞர்கள் பலர். மௌலானா ரூமி, இமாம் கஸ்ஸாலி, ஜுனைதுல் பக்தாதி , அப்துல் கரீம் ஜிலி, இப்னு அரபி நம் கவனத்திற்குரியவர்கள்.

இத்தகைய மேதைகளின் எழுத்துக்களைப் படித்துப் பார்த்தபோது என் மனத்தில் தோன்றிய உணர்வே இப்படியொரு நூலாக உருவெடுத்திருக்கிறது. பொது மக்களின் சிந்தனைக்கு இந்நூல் துணை செய்யும் என்று நான் நம்புகிறேன்.

நாகூர்,

10—10—72. **எஸ். அப்துல் வஹ்ஹாப் பாகவி**

PDF ISLAM

ஏகத்துவமும் எதிர்வாதமும்

வினு: சில தினங்களுக்கு முன்னர் நான் ஒரு புத்தகம் படித்தேன். இஸ்லாத்தின் கொள்கைகளைப் பாமரர்களுக்கு விளக்கும் எண்ணத்துடனேயே அந்த நூலைத் தாம் எழுதியதாக அதன் ஆசிரியர் முன்னுறையில் எழுதியிருக்கிருர். இதில் அதிசயம் என்னவென்ருல், இஸ்லாத்தின் அடிப்படைக் கொள்கைகளை உணர்ந்து கொள்ள வேண்டும் எனும் எண்ணத்துடன் புத்தகத்தை கையில் எடுத்த நான், விவரிக்க முடியாத குழப்பத்துடனேயே அதனை கீழே வைத்தேன். தயவுசெய்து என் குழப்பம தணியும்படி விளக்கம் கொடுக்க முடியுமா?

விடை: அந்தப் புத்தகத்தை நீங்கள் அடிமுதல் நுனிவரை படித்துப் பார்த்தீர்களா?

வினு: ஒரு தடவையல்ல, இரண்டு தடவைகள் படித்துப் பார்த்தேன். முதல் தடவையாகப் படித்தபோது எனக்கு ஒன்றும் புரியவில்லை. ஆசிரியர் கொடுத்திருக்கும் உவமானம் எனக்கு தெளிவு கொடுக்கவில்லை. இரண்டாம் தடவையாகப் படித்தபோது இஸ்லாத்தின் மூலக் கொள்கையான ஏகத்துவம் குறித்துச் சந்தேகம் ஏற்பட்டது. அந்த ஆசிரியர் ஏகத்துவத்தையே அடிப்படையாகக் கொண்டு எழுதத் துவங்கி யிருப்பதால் எனக்கு இஸ்லாத்தின் கொள்கைகள் அனைத்திலும் சந்தேகம் ஏற்பட்டது. என்னுடைய மூளையைக் குழப்பும் முதற் பிரச்சினை இதுதான்: ஏகத்துவம் என்ருல் என்ன? இதற்கு நீங்கள் விடைகொடுத்தும் அடுத்த பிரச்சினைக்கு வருகிறேன்.

PDF ISLAM

விடை: அனைத்தையும் படைத்தாளுகிறவன் ஒரே இறைவன் எனும் கொள்கையையே நாம் ஏகத்துவம் என்று குறிப்பிடுகிறோம். அது உலக மதங்கள் அனைத்திலும் இறைவனைப் பற்றிக் கூறப்பட்டுவந்த உண்மை. நீங்கள் குறிப்பிட்டது போல், ஏகத்துவம் என்பது இஸ்லாத்தின் மூலக் கொள்கைகளில் ஒன்றுதான். இதற்குத் திருக் குர்ஆனிலும் பெருமானாரின் பொன் மொழிகளிலும் போதிய ஆதாரங்கள் இருக்கின்றன. ஆனால் அது இஸ்லாத்தில் மட்டுத்தான் மூலக் கொள்கை என்று சொல்ல முடியாது. இஸ்லாத்திற்கு முன்னர் உலகில் தோன்றிய மதங்கள் அனைத்திலும் அது மூலக் கொள்கையாகவே காட்டப்பட்டு வந்திருக்கிறது.

வினா: அப்படியானால் கருத்து என்ன? இஸ்லாத்தின் கொள்கைகளுக்கும் இதர வேதங்களின் கொள்கைகளுக்குமிடையில் வேற்றுமை கிடையாதென்று சொல்கிறீர்களா?

விடை: இல்லை, நான் அப்படிச் சொல்லவில்லை. அப்படி என்றால் சொல்லவும் முடியாது. ஒரு மதத்திற்கும் மற்றொரு மதத்திற்குமிடையில் வேற்றுமையுள்ள பிரச்சினைகள் எத்தனையோ இருக்கின்றன. அதே சமயத்தில் வேற்றுமையற்ற பிரச்சினைகளும் இருக்கத்தான் செய்கின்றன. வேற்றுமையற்ற பிரச்சினைகளில் ஏகத்துவம் முந்தியது. இதுவே என் கருத்து. உங்களுக்குப் புரியவில்லை என்றால் இப்படிக் கூறலாம். மனிதனுக்கென்று இறைவன் அனுப்பிய மதங்கள் அத்தனையும் காலத்தையும் சூழலையும் அப்போதைய மக்களின் அறிவையும் அனுசரித்தே கொடுக்கப்பட்டிருக்கின்றன.

ஆப்பிரிக்காவில் வாழ்ந்த பழங்குடி மக்களுக்கென்று இறைவன் ஒரு மதத்தை அனுப்பியிருப்பதாக வைத்துக் கொள்வோம். அதே இறைவன் இஸ்ரவேலர்களுக்கென்று வேறொரு மதத்தை அனுப்புகிறான். இந்த இரண்டு வேதங்களும் அவற்றைப் பெறும் மக்களின் அறிவு, சூழல், காலம் முதலிய வேற்றுமைகளை வைத்தே கொடுக்கப்பட்

PDF ISLAM

டிருக்கின்றன. ஆப்பிரிக்க மக்களின் வேதத்தில் காணப் படும் சட்டங்களில் சில, இஸ்ரவேலர்களின் மதத்தில் காணப்பட முடியாது. இஸ்ரவேலர்களைப் பொருத்த மட்டில் கட்டாயக் கடமையான சில கொள்கைகள் ஆப் ரிக்க மதத்தில் காணப்பட முடியாது. ஏனெனில், ஏற் கனவே நான் குறிப்பிட்டது போல், ஒரு பிரிவினருக்கு வரும் வேதம் அவர்களின் சூழலை யொட்டியே அமைகி றது. சூழல் மாறும்போது சட்டங்கள் மாறுகின்றன; சட்டத்திற்கு அடிப்படையான கொள்கைகள் மாறுகின் றன. இதனுல்தான் உலக மதங்களுக்கு மத்தியில, சில் லறைப் பிரச்சினைகளில் முரண்பாடு தோன்றுகிறது.

வினு: காலமே புதிய புதிய சூழல்களை உருவாக்கு கிறது. காலம் மாறும்போது சூழ்நிலையும் மாறுகிறது. நூறு ஆண்டுகளுக்கு முன் இங்கு நிலவிய சூழ்நிலை இப்போது கிடையாது. புத்த பிரானின் காலத்தில் நிலவிய சூழலை ஏசுநாதரின் காலததில் பார்க்க முடியாது. அப்படியானுல் ஒரு காலத்தில் தோன்றிய மதத்திற்கும் மற்ருெரு காலத்தில் தோன்றிய மதத்திற்கிடையில் நிச் சயமாக வேற்றுமை இருக்கும் என்று கூறுகிறீர்களா? புத்த பிரானின் வேதத்துக்கும் ஏசுநாதரின் வேதத்துக் கும் முரண்பாடு உண்டு என்று சொல்கிறீர்களா?

விடை: நிச்சயமாக வேற்றுமை இருக்கும். ஏனெ னில் காலத்தை அடிப்படையாகக் கொண்டு இயற்றப்பட் டிருக்கும் கொள்கைகளும், புதிய காலம் தோன்றும்போது மாறுபட்டுத்தான் ஆகவேண்டும். ஊன்றிப் பார்த்து உண்மையை அறியாத சிலருக்கு இந்த வேற்றுமையே குழப்பத்தைக் கொடுக்கிறது. அதன் அடிப்படையில் அவர்கள் உலக மதங்கள் அனைத்தையும் கட்டோடு மறுக்கிருர்கள்.

வினு: ஒரு மதத்தில் காலத்துக்குப் பொருந்தாத சட்டம் காணப்பட்டால் அதனைக் காலத்துக்குப் பொருந் தும்படி திருத்திக்கொள்ளவேண்டும் என்பதுதானே உங்கள் கருத்து?

PDF ISLAM

விடை : இல்லை, அப்படியில்லை. ஒரு மதத்தை—அது எந்த மதமாயினும்—திருத்த வேண்டிய கவலை உங்களுக்கும் கிடையாது ; எனக்கும் கிடையாது ; வேறு யாருக்கும் கிடையாது. அந்தக் கவலையை இறைவனே ஏற்றுக்கொண்டுவிட்டான். ஒரு மதத்தின் சட்டங்கள் காலத்துக்குப் பொருந்தாதபடி தரம் குறைந்துவிட்டால், அந்தக் காலத்துக்கு ஏற்ற புதியதொரு மதத்தை இறைவன் அனுப்பிவிடுவான். திருத்தவேண்டிய நிலையிலுள்ள மதத்தை யாரும் பின்பற்ற வேண்டியதில்லை மொத்தத்தில், ஒரு மதத்துக்கும் மற்றொரு மதத்துக்குமிடையில் வேற்றுமை ஏற்படத்தான் செய்யும்.

வினா : அப்படியானால் ஏகத்துவக் கொள்கையில் மட்டும் ஏன் வேறுபாடு தோன்றக்கூடாது?

விடை : ஏகத்துவம் என்பது காலத்துக்கும் சூழலுக்கும் கட்டுப்படாத ஒன்று. அது முன்னர் மாறியதும் கிடையாது; பின்னர் மாறப்போவதும் கிடையாது. காலத்தையும் சூழலையும் படைத்த இறைவனின் நிலையை அது விளக்குகிறது. அது என்றைக்கும் மாறியதும் கிடையாது; மாறப்போவதும் கிடையாது. 'ஏன் ?' என்றுதானே கேட்கிறீர்கள் ? ஏகத்துவம் என்பது மனிதன் வைக்கும் கொள்கைதான் என்றாலும், அது மனிதனைப் பற்றிய கொள்கையல்ல. எனவே அது மனிதனைப் போல், அவனுடைய மன நிலையைப்போல் என்றைக்கும் மாறாது. ஏகத்துவம் என்பது இறைவனைப் பற்றிய உண்மை. எனவே அது என்றைக்கும்—எல்லா மதத்திலும் ஒரேமாதிரியாகத்தான் இருக்கும். ஏனெனில் இறைவனின் குணங்கள் மாறுவதில்லை. அவன் தனக்கென்று வகுத்து வைத்திருக்கும் செயல்முறைகள் மாறுவதில்லை.

'இறைவனின் நடைமுறையில் உம்மால் நிச்சயமாக மாறுதலைப் பார்க்க முடியாது'' என்று திருக் குர்ஆன் தெளிவாகத் தீர்ப்பு வழங்குகிறது.

மதவியலில் ஆழ்ந்து சிந்தனை செய்கிறவர்கள் இந்த இறைத் தீர்ப்பை நன்கு உணர்கிறார்கள். அவர்கள் மட்டுமென்ன, நீங்களும் உணரலாம். அது உங்களுக்கும்

PDF ISLAM

சாத்தியம்தான். நடுநிலையில் நின்று, உலக மதங்கள் சில வற்றை எடுத்துவைத்து ஆராய்ந்து பாருங்கள். அவை ஒவ்வொன்றிலும் ஏகத்துவம் வலியுறுத்தப்படுவதை நீங்கள் காணலாம்.

எனவேதான் நான் சொல்கிறேன்; 'ஏகத்துவம் என் பது உலக மதங்களுக்கு மத்தியில் கருத்து வேற்றுமை யைப் பெறாத ஒரு கொள்கை' என்று.

இந்தக் கொள்கை இஸ்லாத்துக்கு ஆணிவேர் போன் றது. அதன் அடிப்படையில்தான் இஸ்லாத்தின் கோட் பாடுகள் அத்தனையும் அமைந்திருக்கின்றன. ஒருவன் ஏகத்துவத்தை நம்பவில்லை என்றால் அவனை முஸ்லிம் என்றே சொல்ல முடியாது.

வினா: ஏகத்துவத்தை இஸ்லாத்துக்கு ஆணிவேர் போன்றது என்று நீங்கள் குறிப்பிடுகிறீர்கள். ஏகத்து வத்தை ஒருவன் நம்பவில்லை என்றால் அவனை முஸ்லிம் என்றே சொல்ல முடியாது என்றும் குறிப்பிடுகிறீர்கள். அப்படியானால், ஒருவன் ஏகத்துவத்தை மட்டும் நம்புகி றான் என்று வைத்துக்கொள்வோம். அகிலமனைத்துக்கும் இறைவன் ஒருவன்தான் என்று அவன் உறுதியாக நம்பு கிறான். ஆனால் வேறு எதிலும் அவனுக்கு நம்பிக்கை யில்லை. அவன் முஸ்லிம் என்று சொல்ல முடியுமா?

விடை: முடியாது. ஏனெனில் ஏகத்துவம் என்பது இஸ்லாத்துக்கு ஆணிவேர் போன்றதுதான் என்றாலும், ஏகத்துவத்துக்கு அடுத்தபடியாக அவன் எத்தனையோ நம்பிக்கைகளை உருவாக்க வேண்டியிருக்கிறது. அது வரை அவனை முஸ்லிம் என்று குறிப்பிட முடியாது— ஆணிவேரை மரம் என்று குறிப்பிட முடியாதது போல்.

ஏகத்துவத்துக்கு மதத் தலைவர்கள் மட்டுமன்றி, மதத்தை விட்டு விலகி நின்ற அறிஞர்களும் ஆதரவு கொடுத்திருக்கிறார்கள். அவர்கள் எழுதிய நூல்களி லிருந்தும் அவர்கள் பேசிய பேச்சுகளிலிருந்தும் இந்த உண்மை நமக்குத் தெரிகிறது.

PDF ISLAM

இந்த வரிசையில் நம்முடைய சிந்தனைக்கு வரக்கூடிய முதல் மனிதர் சாக்ரடீஸ். பகுத்தறிவுப் பிரச்சாரத்தை நாடெங்கிலும் பரப்பிய அவர் குற்றவாளி என்று நீதி மன்றத்தில் நிறுத்திவைக்கப்பட்டிருந்தார். பகுத்தறிவு விசாரணையைத் தூண்டிவிடுவதன் மூலம் அவர் நாத்திகப் பிரச்சாரம் செய்தார் என்பது நீதி மன்றத்தின் குற்றச்சாட்டு. சிறிது நேரத்தில் தண்டனை நிறைவேற இருந்தது. தம் கையாலேயே விஷம் அருந்திச் சாகவேண்டும் என்பது தீர்ப்பு. நாலு பேருக்கு முன்னால் செய்யப்படும் பகிரங்கத் தற்கொலை இது.

விஷக் கிண்ணத்தைத் தூக்கிப் பிடித்துக்கொண்டு கைதிக் கூண்டில் நின்ற சாக்ரடீஸ், தம்மீது சுமத்தப்பட்டிருந்த அபாண்டமான குற்றச்சாட்டை மறுத்தார். சாதாரணமாக அல்ல, ஆணித்தரமாக மறுத்தார். அப்போது அவர் ஆற்றிய மறுப்புப் பேச்சு வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்தது.

அவர் பேசுகிறார், கேளுங்கள் :

'' நான் மரணத்துக்குப் பயப்படவில்லை. தண்டனைக்குப் பயந்து என்னுடைய கருத்தை மாற்றிக் கொள்ளவும் தயாராக இல்லை. என்றாலும் என்மீது சுமத்தப்பட்டிருப்பது அநீதியான குற்றச்சாட்டு என்று மட்டிலும் கூறிவிட விரும்புகிறேன். ஏதென்ஸ் மக்கள் கூடியிருக்கும் இந்த நீதி மன்றத்தில் எனக்கு இழைக்கப்படும் அநீதிக்காக எதிர்கால மக்கள் பொங்கியெழுவார்கள். நான் நாத்திகப் பிரச்சாரம் செய்தேனாம், நல்லவர்களையெல்லாம்—பக்தியுள்ள ஆத்திகர்களையெல்லாம் நான் நாத்திகர்களாக மாற்றினேனாம்: எதிர்தரப்பு வாதிக்கிறது. நாத்திகன் என்றால் யார்? இறைவனை மறுப்பவன் நாத்திகன். இறைவனை மறுக்காத யாரையும் நாத்திகன் என்று சொல்ல முடியாது. இறைவனை நம்பும் ஒருவன் நாத்திகப் பிரச்சாரம் செய்யவும் முடியாது.

PDF ISLAM

"நான் இறைவனை மறுக்க வில்லையே! மிதந்து போகும் மேகத்திலும் சலசலக்கும் பூங்காற்றிலும் பூத்துக் குலுங்கும் செடி கொடிகளிலும் தோற்றம் தரும் ஒரே இறைவனை நான் மறுக்க வில்லையே! அவனை நான் எங்கும் பார்க்கிறேன்; எதிலும் பார்க்கிறேன். அவனை என்னால் மறுக்க முடியாது. நான் மறுத்தது வேறொன்று. ஒன்றுக்கு மேற்பட்ட இறைவர்களையே நான் மறுத்தேன்; மறுக்கிறேன்..."

அவர் ஓர் ஏகத்துவவாதி என்பதற்கு இது ஒன்றே போதிய ஆதாரமாகும்.

வினா: சாக்ரடீஸின் ஏகத்துவத்துக்கும் இஸ்லாத்தின் ஏகத்துவத்துக்கும் வேற்றுமை உண்டா?

விடை: கிடையாது.

வினா: அப்படியானால் சாக்ரடீஸை ஒரு முஸ்லிம் என்று சொல்லலாம் அல்லவா?

விடை: சொல்ல முடியாது. இஸ்லாத்தின் கொள்கைகளில் ஏகத்துவமும் ஒன்றுதானே தவிர, ஏகத்துவம் மட்டுமே இஸ்லாமல்ல. எனவே அவரை முஸ்லிம் என்று சொல்ல முடியாது. 'முவஹ்ஹித்' என்று சொல்லலாம்.

வினா: 'முவஹ்ஹித்' என்றால் அர்த்தம் என்ன?

விடை: ஏகத்துவவாதி என்பது பொருள். ஒரே இறைவனை உறுதியாக நம்புகிறவருக்கு அரபி மொழியில் 'முவஹ்ஹித்' என்று பெயர்.

வினா: முஸ்லிம், முவஹ்ஹித் ஆகிய பதங்களுக்கிடையிலுள்ள வேற்றுமை என்ன?

விடை: முஸ்லிம் எனும் வார்த்தையில் 'முவஹ்ஹித்' அடங்கியிருக்கிறது. முவஹ்ஹித் எனும் வார்த்தையில் முஸ்லிம் அடங்காது. அதாவது: முஸ்லிம்கள்

PDF ISLAM

அனைவரையும் முவஹ்ஹித்கள் என்று சொல்லலாம். ஆனால் முவஹ்ஹித்கள் அனைவரையும் முஸ்லிம்கள் என்று சொல்ல முடியாது.

வினா: நபித் தோழர்களையும் அவர்களுக்குப் பின்னர் தோன்றிய வாழையடி வாழையான முஸ்லிம்களையும் நாம் எப்படி அழைக்க வேண்டும்?

விடை: முஸ்லிம்கள் என்றும் அழைக்கலாம்; முவஹ்ஹித்கள் என்றும் அழைக்கலாம்.

வினா: அபூபக்கர், உமர், உஸ்மான், அலீ (ரலி) ஆகியோரை எப்படி அழைப்பது?

விடை: நபித் தோழர்களுக்கு மத்தியில் இந்த நால்வரும் தனித்து நின்றார்கள். அவர்கள் பெருமானாருடன் நெருங்கிப் பழகினார்கள் என்பது மட்டும் அதற்குக் காரணமல்ல. பெருமானாரின் மறைவுக்குப் பின்னர் இஸ்லாமிய முறைப்படி, பெருமானாரின் அடிச்சுவட்டை ஆதாரமாகக் கொண்டு ஒருவர் பின் ஒருவராக ஆட்சி புரிந்தார்கள் என்பதும் முழுக்காரணமல்ல. மார்க்கத்தின்மீது அவர்கள் கொண்டிருந்த பற்றுதல், ஏகத்துவத்தில் அவர்கள் வைத்திருந்த நம்பிக்கை முதலிய எத்தனையோ காரணங்கள் அதற்கு இருக்கக்கூடும்

அபூபக்கர் அவர்கள் தமது செல்வம் முழுவதையும் இறை வழிக்குச் செலவிடத் தயாராக இருந்தார்கள். பெருமானாரின் காலத்திலேயே அவர்கள் பெரிதும் மதிக்கப்பட்டார்கள். பெருமானார் மறைந்ததும் இஸ்லாமிய ஆட்சிக்கென்று அவர்கள் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். பெருமானாரின் கூற்றுக்கள், கொள்கைகள் அனைத்தையும் அவர்கள் அப்படியே நம்பினார்கள். இதனால் அவர்களுக்கு பெருமானார் கொடுத்த பெயர் 'சித்தீக்' பேருண்மையாளர் என்பது பொருள்.

PDF ISLAM

உமர் அவர்கள் இரண்டாம் ஜனுதிபதியாகத் தேர்ந் தெடுக்கப்பட்டார்கள். கண்டிப்பும் உறுதியுமுள்ள அவர் கள் இஸ்லாமிய ஆட்சியை விரிவுபடுத்தினுர்கள். சோதனை நிறைந்த பெருமானுரின் காலத்தில் முஸ்லிம்களுக்கு நம் பிக்கையை ஏற்படுத்திய பெருமை இந்த நபித் தோழ ரையே வந்தடைகிறது. "எனக்குப் பிறகு திருத்தூதர் ஒருவர் தோன்றுவதா யிருந்தால் அதற்கு உமர் பெரிதும் அருகதையுள்ளவர்" என்று பெருமானுர் பாராட்டி யிருக் கிறுர்கள். இந்த நபித் தோழருக்கு நாம் கொடுக்கும் பெயர் 'பாரூக்'.—நீதியையும் அநீதியையும் பிரித்துக் காட் டுகிறவர் என்பது பொருள்.

மூன்றும் ஜனுதிபதியாகப் பதவிக்கு வந்தவர் உஸ் மான் (ரலி) அவர்கள். வாணிபம் செய்து பெரும் பொருள் ஈட்டிய உஸ்மான் தம் செல்வத்தை அறவழிக்குச் செலவிட் டார்கள். 'உஸ்மான் கனீ' என்று அவர்கள் அழைக்கப் படுகிறுர்கள். கனீ என்ருல் செல்வர் என்று அர்த்தம்.

பிறகு அலியாரிடம் பதவிப் பொறுப்பு ஒப்படைக்கப் பட்டது. பத்து வயதிலேயே இஸ்லாத்தைத் தழுவிவிட்ட அலியார் பெருமானுருடன் பெரிதும் நெருங்கிப் பழகினுர் கள். அவர்களின் அறிவும் திறமையும் அப்போதே பெரி தும் பாராட்டப்பட்டன. அவர்கள் எழுதிய அரசியல் கடி தங்கள் இன்றைக்கும் போற்றப்படுகின்றன. அவர்கள் பேசிய பேச்சுக்கள் இன்றைய இலக்கிய வட்டாரத்திற்குப் பெரிதும் துணை செய்கின்றன.

அறிஞர் வட்டாரம் அலியாருக்கு 'அறிவின் வாசல்' என்று பெயர் கொடுக்கிறது. ஏனெனில் பெருமானுர் ஒருசமயம் இப்படிக் கூறியிருக்கிறுர்கள்: "நான் அறிவுப் பட்டணம் என்ருல், அதற்கு நுழைவாசல் போன்றவர் அலீ".

விஞ: மன்னிக்க வேண்டும். நான் கேட்டது ஒன்று: நீங்கள் கொடுத்திருக்கும் விடை வேருென்று. என் விஞ இதுதான்: இந்த நபித் தோழர்கள் நால்வரை

PDF ISLAM

யும் நாம் எப்படி அழைக்க வேண்டும்? அவர்களை முஸ்லிம்கள் என்று அழைக்க வேண்டுமா? முவஹ்ஹித்கள் என்று அழைக்க வேண்டுமா?

விடை : எப்படியும் அழைக்கலாம். இந்த இரண்டு கோணமும் அவர்களுக்குப் பொருத்தமானவைதான்.

வினா : முவஹ்ஹித்கள் என்று அழைத்தால் ஆட்சேபணை கிடையாது என்றுதானே நீங்கள் சொல்கிறீர்கள்?

விடை : ஆம், ஆட்சேபணை கிடையாது. ஏகத்துவ உணர்வின் அடிப்படையில் அனைத்தையும் தியாகம் செய்யத் துணிந்த அந்தப் பெருந்தகைகளை அப்படி அழைப்பதில் எந்தத் தவறும் கிடையாது. இதனை யாரும் மறுக்க முடியாது.

வினா : நேற்றுவரை பல தெய்வ வழிப்பாட்டிற்கு ஆதரவு கொடுத்த ஒருவன் இன்று இஸ்லாத்தைத் தழுவுகிறான் என்று வைத்துக் கொள்வோம். அவனை முஸ்லிம் என்று சொல்லலாமல்லவா?

விடை : இது தேவையில்லாத கேள்வி. எப்போது அவன் இஸ்லாத்தைத் தழுவுகிறானோ, அப்போதே அவன் முஸ்லிமாகிவிடுகிறான்.

வினா : அவனை முவஹ்ஹித் என்று அழைப்பதில் குற்றமுண்டா?

விடை : அவனை முவஹ்ஹித் என்றும் அழைக்கலாம்.

வினா : அபூபக்கர் (ரலி) போன்ற மேதைகளை முவஹ்ஹித் என்று அழைப்பதில் தவறு கிடையாது என்று நீங்கள் குறிப்பிட்டீர்கள். நேற்றுவரை முரண் வழியில் இருந்துவிட்டு இன்று இஸ்லாத்திற்கு வரும் ஒரு

PDF ISLAM

வனுக்கும் [illegible]ள் முவஹ்ஹித் என்றுதான் பெயர் கொடுக்கிறீர்கள். ஏன் அப்படி?

விடை: ஏனென்ருல் அபூபக்கர் போன்றவர்கள் எதை நம்பிஞர்களோ அதையே இன்று முஸ்லிமான புது மனிதனும் நம்புகிருன். இதனுல் முன்னவருக்குக் கிடைக்கும் பெயர் பின்னவனுக்கும் கிடைக்கிறது. 'இறைவன் ஒருவன்' என்று நம்புவதையே நாம் ஏகத்துவம் என்று குறிப்பிடுகிருேம். இதையே அபூபக்ர் அவர்களும் நம்பிஞர்கள்; அந்தப் புது மனிதனும் நம்புகிருன். ஏனெனில், 'இறைவன் ஒருவனைத் தவிர்த்து வேறு எந்தத் தெய்வமும் கிடையாது—முகம்மது நபி(ஸல்)அவனுடைய திருத் தூதர்' என்பது இஸ்லாத்தின் மூல மந்திரம். இதை நம்பாத யாரையும் முஸ்லிம் என்று சொல்ல முடியாது. இதில் ஒரு பகுதி ஏகத்துவத்தை வலியுறுத்துகிறது. மற்ருெரு பகுதி பெருமாஞரின் நபித்துவத்தைக் காட்டுகிறது.

எனவே அந்தப் புது மனிதனை முவஹ்ஹித் என்று அழைப்பதில் நிச்சயமாகத் தவறு கிடையாது.

விஞ: அப்படியாஞல் அபூபக்ர், உமர்(ரலி) போன்ற நபித் தோழர்களின் ஏகத்துவ நம்பிக்கைக்கும் அந்தப் புது மனிதனின் ஏகத்துவ நம்பிக்கைக்கு மிடையில் வேற்றுமை கிடையாதா?

விடை: வேற்றுமை கிடையாது என்று நான் சொல்ல வில்லை. ஏகத்துவத்தை நம்புவதில் இருவருக்கும் ஒற்றுமையுண்டு என்பதைத்தான் நான் சுட்டிக் காட்டினேன். அதற்காக, இந்த இரண்டு தரத்தாரின் நம்பிக்கைகளுக்கிடையில் எந்த வேற்றுமையும் கிடையாது என்று என்ஞல் சொல்ல முடியாது.

விஞ: அப்படியாஞல், இந்த இரண்டு பேருக்கு மிடையே கொள்கையில் வித்தியாசமுண்டு என்பதை நீங்கள் ஒப்புக்கொள்கிறீர்களா?

PDF ISLAM

விடை: ஒப்புக்கொள்கிறேன். [redacted] பிஞ்சுக்கும் பழத்துக்கு மிடையில் எந்த வேற்[redacted]யும் கிடையாது என்று என்னால் நம்ப முடியாது. அவை இரண்டும் ஒரு மரத்தின் குழந்தைகள்தான். எனினும் அவற்றின் ஒன்று முழு நிலைக்கு வளர்ந்திருக்கிறது; மற்றொன்று ஆரம்ப நிலையில் இருக்கிறது. ஆரம்ப நிலையிலிருக்கும் ஒன்று என்றாலும் ஒரு நாள் முழு நிலைக்கு வளர முடியும். இன்று கனியாக இருக்கும் ஒன்று என்றோ ஒருநாள் பிஞ்சாக இருந்ததுதான்.

இதே போன்று, ஏகத்துவக் கொள்கையுள்ளவர்கள் அனைவரும் ஓர் இனத்தைச் சேர்ந்தவர்கள்தான் என்றாலும், அவர்களில் சிலர் ஆரம்பப் படித்தரத்தில் இருக்கிறார்கள். வேறுசிலர் கடைசிப் படித்தரத்தை அடைந்திருக்கிறார்கள். ஏகத்துவக் கொள்கையுள்ளவர்கள் என்று பார்க்கும்போது அவர்கள் அனைவரையும் முவஹ்ஹித்கள் என்று குறிப்பிடுகிறோம். இந்தக் கோணத்திலிருந்து நம்மால் வேறுபாடு காட்ட முடியாது. என்றாலும் அவர்கள் அடைந்திருக்கும் படித்தரத்தை வைத்துப் பார்க்கும்போது ஏற்றத் தாழ்வு ஏற்படுகிறது. சிலர் ஆரம்பப் படித்தரத்தில் நின்றுகொண்டு மேலே அண்ணாந்து பார்க்கிறார்கள். கடைசிப் படித்தரத்தில் இருப்பவர்கள் வேறுசிலர். அவர்கள் அனைத்தையும் மறந்து, விளக்கத்துக்கும் விரிவுரைக்கும் கட்டுப்படாத பேரின்பத்தில் மூழ்கிக்கிடக்கிறார்கள்.

இன்றைக்கு முதற் படித்தரத்தில் இருக்கும் ஒருவன் என்றாகிலும் ஒருநாள் கடைசிப் படித்தரத்தை அடையக் கூடும். அடைந்துதான் தீரவேண்டும் என்று சொல்ல முடியாது. ஏனெனில் பிஞ்சாக இருப்பதெல்லாம் இறுதியில் கனியாக மாறிவிடுவதில்லை. பிஞ்சுகளில் சில ஆடு மாடுகளுக்கு இரையாகின்றன. இன்னும் சில வெய்யிலின் கொடுமையால் வெம்பிக் கீழே விழுகின்றன. இப்படி எத்தனையோ தடைகள். அவற்றையெல்லாம் கடந்துவிட்டால் அந்தப் பிஞ்சு கனியாக மாறிவிடும்.

PDF ISLAM

இதேபோன்று ஆரம்பப் படித்தரத்தில் இருப்பவர்கள் முறையான பயிற்சிக்குப் பின்னால்—குறுக்கிடும் தடைகளை நொறுக்கி யெறிந்த பின்னால் கடைசி எல்லையை அடைய முடியும். இன்றைக்குக் கடைசிப் படித்தரத்தில் இருப்பவர்கள் எல்லோரும் என்றோ ஒருநாள் ஆரம்பப் படித்தரத்தில் இருந்தவர்களே.

வினா: இப்போது நீங்கள் புதியதொரு பிரச்சினையைக் கிளறிவிடுகிறீர்கள். இதுவரை நான் எண்ணிக் கொண்டிருந்தது ஒன்று. இப்போது உங்கள் விரிவுரையிலிருந்து எனக்குத் தெரியும் உண்மை வேறொன்று. நம்முடைய உரையாடலின் துவக்கத்தில் நான் குறிப்பிட்டேனல்லவா ஒரு நூல், அதில் அதன் ஆசிரியர் தம் கருத்தைத் தெளிவாகக் கூறியிருக்கிறார். அதற்குத் திருக்குர்ஆனிலிருந்தும் நபிக் கருத்திலிருந்தும் ஆதாரங்கள் கொடுத்திருக்கிறார்.

எனவே இப்போது என்னை அந்த ஆசிரியராக வைத்துக்கொள்ளுங்கள். அவரது கருத்துக்களை நான் கூறுகிறேன். அவருக்கு நீங்கள் கொடுக்க நினைக்கும் மறுப்பை என்னிடம் கூறுங்கள். அவர் சார்பில் உங்களிடம் நான் கேட்கும் முதற் கேள்வி இதுதான்: ஏகத்துவத்துக்கு நீங்கள் படித்தரங்களை ஏற்படுத்துகிறீர்கள். இஸ்லாம் இந்தக் கருத்துக்கு எப்படி ஆதரவு கொடுக்கிறது என்று எனக்குத் தெரியவில்லை. ஒன்றே குலம்—ஒருவனே தேவன் எனும் தத்துவத்தைப் பாரில் பரப்பிய பெருமை இஸ்லாத்துக்கு உண்டு. ஆனால் அதனை, தெரிந்தோ தெரியாமலோ, உடைக்கிறீர்கள். சிலரைக் கடைசிப் படித்தரத்துக்கு உயர்த்துகிறீர்கள். வேறு சிலரை ஆரம்பப் படித்தரத்தில் வைத்துத் தாழ்த்துகிறீர்கள். இந்த இரண்டுக்கு மிடையில் எத்தனை படித்தரங்களோ, எனக்குத் தெரியவில்லை.

இந்தப் படித்தரங்களைப் பெருமானார்தான் ஏற்படுத்தினார்கள் என்று நான் நம்பவில்லை. ஏனெனில் அவர்கள் சல்மான் என்ற பாரசீகருக்கும் பிலால் என்ற நீக்ரோவருக்கும் வேற்றுமையை ஏற்படுத்தவில்லை, இன வேற்றுமை,

PDF ISLAM

குலவேற்றுமை, நிற வேற்றுமை அனைத்தையும் அழித்து விட்டு அவர்கள், "மக்கள் அனைவரும் இறைவனுக்கு அடிமைகள்; மக்களனைவரும் சகோதரர்கள்" என்று கூறினார்கள்.

மற்றொரு சமயம் அவர்கள் இப்படிக் கூறியிருக்கிறார்கள்: "நானும் உங்களைப் போன்ற மனிதன்தான். என்றாலும் எனக்கு இறைவனிடமிருந்து செய்தி வருகிறது. இது ஒன்றுதான் எனக்கும் உங்களுக்குமுள்ள வேற்றுமை."

நீங்கள் கூறுவதுபோல் ஏகத்துவத்துக்கு அப்படி ஏதேனும் படித்தரம் இருந்தால், அதற்குப் பெரிதும் தகுதியுள்ளவர்கள் பெருமானார். மற்ற யாரையும் விட அவர்கள் உயர்ந்த படித்தரத்தில் இருக்க வேண்டும். ஆனால் அவர்களே 'நானும் நீங்களும் சமம்' என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். தமக்கும் மற்றவர்களுக்குமுள்ள ஒரே வேற்றுமை இறைவனிடமிருந்து தமக்குக் கிடைக்கும் செய்தியறிவிப்பு என்று சுட்டிக் காட்டியிருக்கிறார்கள். இந்த ஒரேயொரு வேற்றுமையைத் தவிர்த்து வேறு எந்த வேற்றுமையையும் அவர்கள் வகுத்து வைத்ததாக எனக்குத் தெரியவில்லை. தவிர, அவர்கள் சுட்டிக் காட்டிய வேற்றுமை அவசியமானதும்கூட. இது மதத் தலைவரையும் மக்களையும் பிரித்துக் காட்டுகிறது. ஆசிரியருக்கும் மாணாக்கர்களுக்கும் வேற்றுமை எவ்வளவு அவசியமோ அவ்வளவு அவசியம் இந்த வேற்றுமை.

ஆனால் உங்கள் கருத்து முற்றும் புதியதொரு கோணத்திலிருந்து உருவாகிறது. இறைவனிடமிருந்து மதத் தலைவருக்குக் கிடைக்கும் செய்தியை வைத்து நீங்கள் படித்தரம் பிரிக்கவில்லை. பெருமானாரைப் பின்பற்றிய மக்களுக்கு மத்தியிலேயே நீங்கள் படித்தரங்களை உருவாக்குகிறீர்கள்.

எனவே ஏகத்துவத்துக்குப் படித்தரம் பிரிக்கும் உங்கள் கருத்தை நான் மறுக்கிறேன். படித்தரம் பிரிக்க முடியும் என்பதற்கு விளக்கம் தர முடியுமா?

PDF ISLAM

விடை : நூலாசிரியர் ஒருவருக்குப் பிரதிநிதியாக நின்று வாதாடப்போவதாகக் கூறினீர்களல்லவா? அப்படிப் பார்க்கும்போது இந்தக் கேள்வியை நீங்கள் கேட்டிருக்கவே கூடாது. ஏனெனில், அந்த ஆசிரியரின் மனத்தில்கூட இப்படியொரு பொருளற்ற கேள்வி தோன்றியிருக்க முடியாது.

இஸ்லாத்தின் சமத்துவக் கொள்கையைச் சரிவரப் புரிந்துகொள்ளாததால் ஏற்பட்ட விளைவுதான் இப்படி உங்கள் மனத்தில் கேள்வியாக உருவெடுத்திருக்கிறது. அதே வேளையில் இதனை நீங்கள் இன்னும் தெரிந்து கொள்ளாமலிருப்பது குறித்து நான் வேதனைப்படுகிறேன்.

ஒன்றே குலம் ஒருவனே தேவன் எனும் கொள்கையை நானும் மறுக்கவில்லை; யாரும் மறுப்பதற்கில்லை. இதற்கு நீங்கள் காட்டும் நபிக் கருத்துக்கள் ஆதாரபூர்வமானவைதான். எனவே இதிலும் எனக்கு ஆட்சேபனை கிடையாது. ஆனால் நீங்கள் இஸ்லாத்தின் சமத்துவ நோக்கத்துக்குப் புதியதொரு விரிவுரை கொடுக்கிறீர்கள். உலகில் தோன்றிய மனிதர்கள் அனைவரும் பிறப்பிலும் குலத்திலுமட்டுமன்றி, குணத்திலும் கொள்கையிலும் சரிசமமானவர்களே என்று வாதிக்கிறீர்களா?

இந்த வாதம் எத்துணை அபத்தமானது என்பதற்கு ஆதாரம் தேவையில்லை. சாதி இரண்டொழிய வேறில்லை ஒன்று, ஆண் சாதி; மற்றொன்று பெண்சாதி. இது உலகமே ஏற்றுக்கொண்ட உண்மை. உங்களாலோ என்னாலோ இந்த வேற்றுமையை அழிக்க முடியாது. ஏனெனில் இது இறைவன் ஏற்படுத்திய வேற்றுமை.

இந்த ஒரே ஒரு வேற்றுமையைத் தவிர்த்து மனிதர்களிடையே வேறு எந்த வேற்றுமையும் கிடையாது என்று நீங்கள் வாதாடினால், உங்கள் வாதத்திற்கு உங்களாலேயே ஆதாரம் காண முடியாது. உங்களோடு பழகுகிறவர்களையே கொஞ்சம் உற்றுப் பாருங்கள். இந்த உண்மை தெளிவாகத் தெரியும்.

PDF ISLAM

மக்களில் சிலர் தீய செயல்களைத் தம் பிறப்புரிமைக ளாகக் கொண்டிருக்கிறார்கள். அவர்களின் உள்ளத்தில் தீமையின் கறை ஆழமாகப் படிந்திருக்கிறது அவர்களை மக்கள் நிந்திக்கிறார்கள் ; 'அயோக்கியர்கள் ; பண்பற்ற வர்கள்' என்று திட்டுகிறார்கள்.

வேறு சிலர் நற்செயல்களுக்குப் பிறப்பிடமாக இருக் கிறார்கள். இவர்கள் யாருக்கும் தீங்கு செய்வதில்லை ; பழ குப்போது யாருடைய மனத்தையும் புண்படுத்துவதில்லை; பண்புக்கு மாறுபட்ட எந்தச் செயலையும் செய்வதில்லை. இவர்களை மக்கள் போற்றுகிறார்கள்; பின்பற்றுகிறார்கள்.

இந்த இரண்டு சாராரையும் நீங்கள் ஒரே நிலையில் வைத்துப் பார்க்கிறீர்களா? இவர்களுக்கு மத்தியில் வேற்றுமை கிடையாது என்று நினைக்கிறீர்கள்? அப்படி ஏதேனும் வேற்றுமை இருந்தால் அதனைப் பிடுங்கி எறிய வேண்டும் என்று கருதுகிறீர்கள்?

நம்மிடையே நல்லவர்களும் இருக்கிறார்கள் ; கெட்ட வர்களும் இருக்கிறார்கள். இவர்களுக்கு மத்தியில் கண் டிப்பாய் வேற்றுமையுண்டு. நம்மிடையே ஆத்திகர்களும் இருக்கிறார்கள்; நாத்திகர்களும் இருக்கிறார்கள். இவர்க ளுக்கு மத்தியில் கொள்கையில் நிச்சயமாக வேற்றுமை யுண்டு. இங்கு வறியவர்களும் இருக்கிறார்கள்; செல்வர்க ளும் இருக்கிறார்கள். இவர்களிடையே சுத்தமாக வேற் றுமையுண்டு. இந்த வேற்றுமைகளெல்லாம் அழிக்கப் பட்டால் உலக வாழ்வே சீர்குலைந்துவிடும்.

வினா : எனக்குச் சிரிப்பு வருகிறது. இந்த வேற்று மைகளை எல்லாம் அழிக்க முடியாது என்று ஏன் கூறுகி றீர்கள் ?

விடை : அழிக்க முடியாது என்று நான் சொல்ல வில்லை. 'அவற்றை அழித்தால் உலக வாழ்வே சீர் குலைந்து போய்விடும்' என்றே நான் கூறினேன்.

வினா: அப்படியே வைத்துக்கொள்வோம். உதாரணத் திற்கு ஒரு வறியனையும் ஒரு செல்வனையும் எடுத்துக் கொள்வோம். இவர்களிடையில் வேற்றுமையுண்டு என் றால், அதனை அழித்தால் உலக வாழ்வு அழிந்துபோகுமா

PDF ISLAM

என்றும் கூறுகிறீர்கள் அல்லவா? அந்தச் செல்வனிட மிருக்கும் பணத்தைப் பங்கிட்டுக் கொடுத்துவிட்டால் அந்த வறியவனும் செல்வனுகிவிடுவான். ஏற்கனவே யிருந்த வேற்றுமை அழிந்துபோய்விடும். இதனுல் ஏழை யும் பணக்காரனும் சம நிலையில் வாழ்வதற்கு வசதி ஏற் படும். முன்னவனுக்கு வறுமை நீங்கும்; பின்னவனுக்குச் செருக்கு நீங்கும். இதனுல் உலக வாழ்வில் தித்திப்பு ஏற் படுமே தவிர, அழிவுக்கு வழி கிடையாது.

எனவே, ஏழை—பணக்காரன் எனும் வேற்றுமையை அழிக்கத்தான் வேண்டும். இதனுல் உலக வாழ்வுக்கு எந் தத் தீங்கும் ஏற்பட முடியாது.

விடை: தற்கால அறிஞர்களில் சிலர் இப்படித்தான் நினைத்துக்கொண்டிருக்கிருர்கள். செல்வர்களின் சொத் துக்களையெல்லாம் ஏழைகளுக்குச் சம அளவில் பங்கிட்டுக் கொடுத்துவிட்டால் சமத்துவ வாழ்வு மலர்ந்துவிடும் என்று பகற்கனவு காண்கிருர்கள். இந்த பகற்கனவு என்றைக்கும் நிறைவேறப் போவதில்லை. அப்படியே நிறைவேறினுலும் உலக வாழ்வு சீராக நடக்காது. ஏனெனில், மக்களில் பலர் வறுமையின் தூண்டுதலி ஞல் தான் வேலை செய்கிருர்கள். அரைவயிற்றுக் கஞ்சிக் காக எடுத்துக் கொள்ளும் முயற்சியில் அரிய சாதனைகள் புரிந்தவர்கள் பலர் நம்மிடையே இருக்கிருர்கள்.

வினு: எனக்குச் சரியாகப் புரியவில்லை. ஆரம்பத் திலிருந்து நீங்கள் இப்படித்தான் சொல்கிறீர்களே தவிர, மேற் குறிப்பிட்ட வேற்றுமையை அழிப்பதால் எப்படி உலக வாழ்வு சீர்குலையும் என்று நீங்கள் கூறவில்லை. எனவே உங்கள் வாதத்திற்கு விளக்கம் தேவை.

விடை: இப்போது எனக்கு ஒரு சம்பவம் நினைவுக்கு வருகிறது அந்தச் சம்பவமே உங்களுக்குப் பதில் கொடுக் கும் என்று நம்புகிறேன்.

ஒருசமயம் சுலைமான் நபியவர்கள் ஓர் ஏழைக் குடி யானவனைக் கண்டார்கள். அவனுடைய வாழ்க்கையைக் கேட்டுத் தெரிந்துகொண்ட சுலைமான் நபிக்கு இரக்கம் ஏற்பட்டது உடனே இறைவனிடம் கேட்டார்கள்;

PDF ISLAM

"எல்லாம் வல்ல நாயனே. உனக்கு எதுவும் சாத்தியம். உனக்கு சாத்தியமில்லாதது எதுவுமில்லை. நீ மனம் வைத்தால் யாரையும் உயர்த்தலாம்; யாரையும் தாழ்த்தலாம். ஏழையைப் பணக்காரனுக்குவதும் பணக்காரனை ஏழையாக்குவதும் உன் சக்திக்கு அற்பக் காரியங்கள். இந்தப் பரந்த உலகில் ஏழை பணக்காரன் என்ற வேற்றுமையை ஏன் ஏற்படுத்தி வைத்திருக்கிறாய்?..."

இறைவன் விடை கொடுத்தான்; "உண்மையை நீர் தெரிந்துகொள்ளவில்லை. இந்த வேற்றுமை அழிக்கப் பட்டால் உலக வாழ்வே சீர்குலைந்து போய்விடும்."

"இறைவனே! மனிதர்கள் அனைவரும் சமம் என்று தீர்ப்பு வழங்கியிருக்கும் உனக்குத் தெரியாதது ஒன்றுமில்லை. ஆனால் நீ கூறுவது உன் அடியானுக்குப் புரியவில்லை. ஏழை—பணக்காரன் என்ற வேற்றுமையைக் கட்டோடு அழித்துவிட்டால் நல்லது என்று உன் அடியானின் மனம் கூறுகிறது" என்று சுலைமான் நபி வாதாடினார்கள்.

"நாம் மறைத்து வைத்திருக்கும் உண்மையை இன்னும் நீர் தெரிந்துகொள்ளவில்லை. உமக்கு உண்மையை தெளிவுபடுத்துகிறோம். நீர் என்ன கேட்கிறீர்? ஏழை பணக்காரன் எனும் வேற்றுமை இருக்கக் கூடாது என்பதுதானே உமது ஆசை? சரி, நாம் ஏற்றுக்கொண்டோம். அந்த வேற்றுமையை எப்படி அழிக்கலாமென்று நினைக்கிறீர்?" என்று வல்லவன் கேட்டான்.

"எங்கும் நிறைந்த இறைவனே! உனக்குத் தெரியாத உண்மையா இது! தங்கத்தை மழையாகப் பொழிய வைத்தால் இந்த வேற்றுமை அழிந்துபோகுமென்று அடியேனின் மனம் கூறுகிறது."

சுலைமான் நபியின் வேண்டுகோள் நிறைவேற்றப்பட்டது, அன்றிரவே தங்கத் துகல்கள் விண்வெளியிலிருந்து கீழே விழத் தொடுத்தன. மக்கள் அனைவரும் தம்மால் இயன்ற அளவு சேர்த்து வைத்துக்கொண்டார்கள். தங்க மழை நின்று விட்டது.

PDF ISLAM

இறைவனிடமிருந்து செய்தி வந்தது: "உமது பிரார்த்தனை ஏற்றுக்கொள்ளப்பட்டது. இனிமேல்தான் நாம் குறிப்பிட்ட உண்மை வெளியாகும்!"

சுலைமான் நபி ஆனந்தத்தில் மிதந்தார்கள். கண்ணெட்டிய தூரம்வரை செல்வத்தின் பூரிப்புத் தெரிந்தது. ஏழையின் ஈனப் புலம்பலுக்குப் பஞ்சம் ஏற்பட்டுவிட்டது. "புகழுக்குரிய இறைவனே! நீயே அனைத்துக்கும் உரியவன்" என்று அவர்கள் பாராட்டினார்கள்.

சில தினங்களுக்குள் பெரியதொரு மாறுதல் தோன்றிற்று. காலையிலிருந்து மாலைவரை ஓயாது உழைத்தவர்கள் வீட்டிலேயே முகாம்போட ஆரம்பித்தார்கள். வேலை செய்யாதவர்களின் எண்ணிக்கை உயர ஆரம்பித்தது. அரண்மனையில் பணிபுரிகிறவர்களில் பலர் சொல்லிவைத்தாற்போல் வேலையை ராஜினாமாச் செய்தார்கள். ஆனால் சுலைமான் நபி கவலை தீர்ந்த திருப்தியுடன் இருந்தார்கள். ஏனெனில் அவர்களின் கருத்துப்படி ஏழை—பணக்காரன் எனும் வேற்றுமை அழிந்துவிட்டது.

திடீரென்று ஒருநாள் வானம் இருண்டது; மின்னல் பளிச்சிட்டது; இடி காதை அடைத்தது. சிறிது நேரத்தில் மழை பெய்யத் துவங்கிவிட்டது. இந்தத் தடவை பெய்தது தங்க மழையல்ல—தண்ணீர் மழை

சுலைமான் நபி ஏறிட்டுப் பார்த்தார்கள். கூரையிலிருந்த ஒரு சிறு ஓட்டையின் வழியாகத் தண்ணீர் வடிந்துகொண்டிருந்தது. கொத்தனாரை அழைத்து வருவதற்காக அரண்மனையின் வேலைக்காரர்களில் ஒருவர் விரைந்து சென்றார்.

விரைந்து சென்றவர் சிறிது நேரத்தில் விரைந்துவந்தார். நன்றியுணர்வுள்ள அந்த வேலைக்காரரின் முகத்தில் வேதனை படர்ந்திருந்தது.

"கொத்தனாரை அழைத்து வரவில்லையா?" என்று நபி கேட்டார்கள்.

"அவர் வர மறுத்துவிட்டார்!" — பணிவுடன் வந்தது விடை...

PDF ISLAM

"வர மறுத்துவிட்டாரா! ஏன்? காரணம் என்ன?"

தயக்கத்துடன் கூறினார் வேலைக்காரர்: "வேலை செய்யவேண்டிய தேவையில்லை என்றார். சில தினங்களுக்கு முன்னால் பெய்த தங்க மழையில் தமக்குப் போதுமானதை அவர் சேர்த்து வைத்திருக்கிறாராம்!"

இந்தக் கதையிலிருந்து உங்களுக்கு என்ன தெரிகிறது?

வினா: ஒன்றும் தெரியவில்லை—அது ஆதாரமற்ற கற்பனைக் கதை என்பதைத் தவிர.

விடை: இது ஆதாரபூர்வமான வரலாற்றுத் துணுக்கு என்றோ திருக் குர்ஆனிலிருந்து எடுக்கப்பட்டிருக்கும் கருத்து என்றோ நான் சொல்லவில்லை. இந்தக் கதை அறிஞர்களின் கண்ணோட்டத்தில் எந்த நிலையில் இருக்கிறதென்று நாம் ஆராய வேண்டியதில்லை. உங்கள் கருத்துப்படி இதனைக் கற்பனைக் கதை யென்று வைத்துக்கொண்டாலும், இதிலுள்ள உண்மையை நாம் அலட்சியம் செய்து விடுவதற்கில்லை.

வினா: கற்பனைக் கதையில் எப்படி உண்மைஇருக்க முடியும்? உண்மைக்கு மாறுபட்டதைத்தானே நாம் கற்பனை என்று சொல்கிறோம்?

விடை: இல்லை, நீங்கள் நினைப்பது தவறு. கற்பனை என்பது மனிதனுக்கு இறைவன் கொடுத்திருக்கும் அரிய செல்வங்களில் ஒன்று வாழ்க்கைக்குப் பொருந்தாத வெற்றுக் கற்பனையை வேண்டுமானால் உண்மைக்கு மாறுபட்டது என்று கூறுங்கள். அதற்காகக் கற்பனையில் தோன்றுவதெல்லாம் உண்மைக்கு மாறுபட்டதாகத் தான் இருக்க வேண்டுமென்று கூறாதீர்கள். ஏனெனில் கற்பனைச் செல்வத்தின் துணைகொண்டு எதிர்காலத்தை அளந்து பார்க்கிறவர்களும் நம்மிடையே இருக்கிறார்கள்.

சற்றுமுன் நான் கூறியது போல், கற்பனை என்பது இறைவன் கொடுத்த செல்வங்களில் ஒன்று. அதிலிருந்து மனிதனுக்கு எத்தனையோ நன்மைகள் உருவாக முடியும்.

PDF ISLAM

இல்லையேல் அதனை இறைவன் மனிதனுக்குக் கொடுத்திருக்க வேண்டியதில்லை. நோக்கமும் குறிக்கோளும் இல்லாமல் இறைவன் எதையும் படைக்கவில்லை.

"உங்களை நாம் வீணாகவே படைத்திருக்கிறோம் என்று நீங்கள் நினைக்கிறீர்கள்?" என்று கேட்கிறது திருக் குர்ஆனில் ஒரு வசனம்.

வினா: உண்மையான வரலாற்று ஏடுகள் குவிந்து கிடக்கும்போது எதற்காக கற்பனைக் கதைகளை எழுதி வைக்கிறார்கள்?

விடை: உண்மை வரலாறு, கற்பனைக் கதை என்று இரண்டு கூறு போடுகிறீர்கள். முன்னதற்குப் பின்னது மாறுபட்டது என்பதுதான் உங்கள் கருத்து என்று நான் நினைக்கிறேன். உண்மை வரலாறு என்று எதை நீங்கள் குறிப்பிடுகிறீர்களோ அதில் கற்பனையே கிடையாதென்று உங்களால் நிரூபிக்க முடியாது. கற்பனை என்று எதை நீங்கள் குறிப்பிடுகிறீர்களோ அதில் சிறிதும் உண்மை கிடையாதென்று உங்களால் நிரூபிக்க முடியாது.

வினா: அதாவது?

விடை: அதாவது, வரலாற்று நிகழ்ச்சிகளில் சில வேளை கற்பனை கலக்கிறது; உண்மைக்கு மாறுபட்ட சம்பவங்கள் பலவந்தமாகத் திணிக்கப்படுகின்றன. பெருமானாரின் வாழ்க்கை சம்பந்தமாக வெளிவந்திருக்கும் ஆங்கில நூல்களில் சில இதற்கு விளக்கம் கொடுக்கும். வேறு சில வேளை கற்பனைக் கதைகளில் உண்மை கலக்கிறது. எளிதில் உணர்ந்துகொள்ள முடியாத உயர்ந்த தத்துவங்கள் பின்னிப் பிணைந்து நிற்கின்றன.

வினா: இப்படிக் கற்பனை கலந்து பேசுவதையோ எழுதுவதையோ பெருமானார் ஆதரித்திருக்கிறார்களா?

விடை: ஆம், ஆதரித்திருக்கிறார்கள். அவர்களே பல சமயம் அப்படிப் பேசியிருக்கிறார்கள். தாம் சொல்லும் உண்மையை மற்றவர்கள் சரிவரப் புரிந்துகொள்ளமாட்

PDF ISLAM

டார்கள் என்று தோன்றியபோதெல்லாம் அவர்கள் கற்பனைச் செல்வத்தின் துணைகொண்டு அழகான உவமானங்களை எடுத்துப்போட்டு உரையாடியிருக்கிறார்கள்.

ஐங்காலத் தொழுகைக்கு அவர்கள் பெரிதும் முக்கியத்துவம் கொடுத்தார்கள். மனிதன் செய்யும் தீமைகளையெல்லாம் அது அழித்துவிடுகிறது என்றார்கள். இதற்கு அவர்கள் இப்படி உவமானம் கொடுத்தார்கள்.

"உங்கள் வீட்டருகே ஓர் ஆறு ஓடிக்கொண்டிருக்கிறது. தினம் ஐந்து வேளை நீங்கள் குளிக்கிறீர்கள். உங்கள் உடலில் அழுக்கு இருக்க முடியுமா? முடியாது. இது போலவே, நீங்கள் தினம் ஐந்து வேளை தொழுதால் உங்கள் செயலில் தீமை இருக்காது?"

உதாரணத்துக்கு இது ஒன்று போதாதா?

வினா: வாழ்க்கைத் தத்துவங்களை உணர்த்துவதற்காகவே அறிஞர்கள் கற்பனைக் கதைகளை எழுதினார்கள் என்றுதானே கூறுகிறீர்கள்?

விடை: ஆம். வாழ்க்கைக்கு முரண்பட்ட கற்பனைப் பின்னலுக்கு நிச்சயமாக இஸ்லாத்தில் மதிப்புக் கிடையாது.

வினா: சுலைமான் நபி குறித்து நீங்கள் குறிப்பிட்ட கதை இத்தகையது தானே? தத்துவத்தை அடிப்படையாகக்கொண்டு உருப்பெற்றிருக்கும் கற்பனைக் கதை என்றால் தவறில்லையே?

விடை: அப்படியும் சொல்லிவிட முடியாது. நான் குறிப்பிட்ட கதையில் உயர்ந்த தத்துவம் ஒன்றுண்டு. ஊன்றிப் பார்க்கிறவர்களுக்கு இந்தத் தத்துவம் நன்றாகத் தெரியும். ஆனால் இதைத் தவிர்த்து மற்ற அனைத்தும் கற்பனையே என்றும் சொல்லிவிடுவதற்கில்லை. உண்மையிலேயே இப்படியொரு சம்பவம் நடந்திருக்க முடியாது என்று தர்க்கரீதியாக நிரூபிக்க முடியாது. கார்முகில் கூட்டத்திலிருந்து தண்ணீரைத் தெளிக்கும் இறைவனுக்கு, கண்காணாத உயரத்திலிருந்து தங்கத் துகள்களை இறைப்பது அசாத்தியமல்ல.

PDF ISLAM

வினு: இத்தக் கதையிலுள்ள தத்துவம்தான் என்ன?

விடை: 'உலக வாழ்வுக்கு ஏற்ற—தாழ்வு ஆணி வேர் போன்றது. இதனை ஒழித்தால் உலக மக்களின் இயக்கம் தேங்கிப்போய்விடும்'—மேற்குறிப்பிட்ட கதையிலுள்ள தத்துவம் இதுதான்.

வினு: அப்படியானுல் உலகில் ஏற்ற—தாழ்வு இருக்கத்தான் வேண்டும் என்பதுதானே உங்கள் கருத்து?

விடை: இது என் க்ருத்தல்ல; உலக நியதி.

வினு: இந்த உலக நியதியைப் படைத்தது யார்?

விடை: உலகத்தைப் படைத்தவன்.

வினு: பெருமானுருக்கு இஸ்லாத்தை கொடுத்தவனும் அவன் தானே?

விடை: ஆம்.

வினு: அப்படியானுல் இஸ்லாத்தில் சமத்துவம் கிடையாது என்று கூறுகிறீர்களா?

விடை: இல்லை. எந்தப் பிரச்சினைகளில் சமத்துவம் தேவையோ அந்தப் பிரச்சினைகளில் இஸ்லாம் சமத்துவத்தை வலியுறுத்துகிறது. மனிதனிடமிருந்து மனிதன் பெறும் சலுகை, மனிதனுக்கு மனிதன் கொடுக்கும் கண்ணியம், இறைவனுக்கு மனிதன் செய்யும் பணி, பெருமானுரின் நடைமுறையை அனுசரித்து—இறைவனின் கருத்துக்கு மதிப்புக் கொடுத்துச் செய்யப்படும் திருமணம் முதலிய பல்லாயிரம் பிரச்சினைகள் இங்கு வருகின்றன. இவற்றில் நிச்சயமாகச் சமத்துவம் வலியுறுத்தப்படுகிறது.

மனிதன் உலகத்திற்கு வாழ வந்திருக்கிருன்: செயலாற்றுவது அவனுடைய வாழ்வில் ஒரு பகுதி. தனி மனிதனின் வாழ்வைவிடச் சமுதாய வாழ்வுக்கு முக்கியத்துவம் உண்டு. எனவே மனிதனுல் தனித்து நின்று வாழ

PDF ISLAM

முடியாது. தினம் அவன் எத்தனையோ விதமான மனிதர்களைச் சந்திக்க வேண்டியிருக்கும்: அப்போதெல்லாம் அவன் மனிதாபிமானத்துக்கு மதிப்புக் கொடுக்க வேண்டுமே தவிர, நிறத்தையோ இனத்தையோ பொருட்படுத்தக் கூடாது. இப்படித்தான் பெருமானுர் நடந்துகொண்டார்கள். தம் நண்பர்கள் அனைவரிடமும் அவர்கள் ஒரே விதமாகவே பழகினுர்கள்; எதிரில் வரும் நண்பர்கள் எந்தக் குலத்தைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும் 'சலாம்' சொன்னுர்கள். ''மனிதர்கள் அனைவரும் சமம்'' எனும் கருத்து இங்குதான் தன் வலிமை முழுவதையும் காட்டுகிறது.

இதே கருத்தை இறை வசனம் ஒன்று தெளிவுபடுத்துகிறது: ''உங்களில் இறையச்சம் உள்ளவர்களே சிறந்வர்கள் என்பதை நீங்கள் தெரிந்துகொள்ள வேண்டும் என்பதற்காகவே நாம் உங்களைப் பல பிரிவினர்களாகப் படைத்திருக்கிறோம்.''

இஸ்லாத்தின் ஆரம்பக்கட்டத்தில் பல்வேறு இனத்தையும் குலத்தையும் சேர்ந்தவர்கள் இஸ்லாத்தைத் தழுவினுர்கள். அடிமைகள் என்று கருதப்பட்ட சுஹைப், அம்மார் முதலானோர் இஸ்லாத்தைத் தழுவியபோது அவர்களுக்குத் தரமான கண்ணியம் கொடுக்கப்பட்டது. மேற்குலத்தவர் என்று கருதப்பட்டவர்களுக்கு எந்தவிதமான கண்ணியம் கொடுக்கப்பட்டதோ அதேவிதமான கண்ணியம் கொடுக்கப்பட்டது. நாலுபேருக்கு மத்தியில் உட்கார்ந்து அவர்கள் உரையாடினுர்கள்; செயலாற்றினுர்கள்.

அர்கம் என்ற அரபியரின் வீட்டுக்குள்ளிருந்து ரகசியமாக இயங்கிக்கொண்டிருந்த இஸ்லாம், உலகின் பல பாகங்களுக்கும் சமத்துவத்தின் பெருமையை அனுப்பிக்கொண்டிருந்தது. அடிமைகளாக வாழ்ந்தவர்கள் பிற்காலத்தில் அரசியல் அதிகாரிகளாகத் திகழ்ந்ததற்கு உதாரணம் வேண்டுமா? இஸ்லாத்தின் வரலாற்றைத் திருப்பிப் பாருங்கள். அர்த்தமற்ற—தாழ்வுகளுக்கு மதிப்புக் கொடுக்காத இஸ்லாம், மனிதனின் திறமைக்கும் அறிவுக்

PDF ISLAM

கும் தனிப்பட்ட கண்ணியம் கொடுக்கிறது. ஒரு மனிதனுக்குக் கிடைக்கும் மரியாதை அவனுடைய மனப் பண்பைப் பொறுத்ததுதானே தவிர, அவனுடைய குலத்தையோ நிறத்தையோ மொழியையோ பொறுத்ததல்ல.

பெருமானாரின் பிரச்சாரம் உயரத் தொடுத்தபோது நபித் தோழர்கள் அனைவரும் ஒன்றுபட்டு வேலை செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டது. அவர்கள் செய்த வேலைகளை வைத்துப் பார்க்கும்போது, இஸ்லாத்தின் சகோதரத்துவமும் சமத்துவமும் நன்ருகத் தெரிகின்றன். மனிதனின் குணத்துக்கும் அவன் செய்யும் வேலைக்கும் பெருமானார் மதிப்புக் கொடுத்தார்களே தவிர, அவன் பேசிய மொழிக்கோ அவன் வாழ்ந்த இடத்துக்கோ அவர்கள் தம் கவனத்தைத் திருப்பவில்லை.

ஒருவன் எங்கு பிறந்தாலும், எந்த மொழியைப் பேசியிருந்தாலும், எந்தக் குலத்தில் தோன்றியிருந்தாலும்—நேர் வழியில் நடக்கத் துணிந்துவிட்டால் போதும், அவன் பாராட்டுக்குரியவனே.

இதனை மௌலானா ரூமி இப்படி விளக்கினார்கள்:

"இப்படித் தீமைகளில் சிக்கித் தவித்து அனுபவம் பெற்ற ஒருவன் மெஞ்ஞானியாக மாறும்போது அவனை நம்மால் இழிவுக் கண்கொண்டு பார்க்க முடியாது. அவனுடைய கடந்த காலத்தை வைத்து நிகழ் காலத்துக்குத் தீர்ப்பு வழங்க முடியாது... எனவே அவனை முழு மனிதன் என்றும் சொல்லலாம்; அகில மக்களுக்கே தலைவன் என்றும் குறிப்பிடலாம்." ✱

மனிதனுக்கு இஸ்லாம் ஏற்படுத்திய கடமைகளில் இறை வணக்கத்துக்கு முதலிடமுண்டு. இதிலும் வேற்றுமை காட்டப்படவில்லை. அதிபதிக்கு அருகில் அடிமைகள் நின்று வணங்கலாம். நாடாளும் கலீபாவை நேருக்கு நேர் கண்டு, ஒரே வரிசையில் நின்று, இறை வணக்கத்தை நிறைவேற்றும் உரிமை சாதாரணக் கூலிக்காரனுக்கும் உண்டு. ஏழைக்கும் பணக்காரனுக்குமிடையில்

✱ 'மௌலானா ரூமியின் தத்துவங்கள்' என்ற நூலிலிருந்து.

PDF ISLAM

இங்கு வேற்றுமை கிடையாது. உயர்ந்தவனுக்கும் தாழ்ந் தவனுக்கும் மத்தியில் இங்கு பாகுபாடு கிடையாது.

மனிதர்கள் அனைவரும் இறைவனை வணங்கியே ஆக வேண்டும் என்பது இஸ்லாத்தின் கட்டளை. வணங்கும் முறை, வணக்கத்தின் அளவு முதலியவை அனைத்தும் மனிதர்களுக்கே பொதுவானவை.

இப்படிச் சமத்துவத்தைப் போதிக்கும் பிரச்சினைகள் பல்லாயிரம். அவற்றையெல்லாம் விளக்குவதற்கு இப் போது நமக்கு அவகாசம் கிடையாது. தவிர அது நாம் எடுத்துக்கொண்டிருக்கும் தலைப்புக்கு முற்றிலும் மாறு பட்டது.

வினா : சமத்துவம், ஏற்ற-தாழ்வு பற்றி உங்கள் கருத்துத்தான் என்ன? சில விஷயங்களில் சமத்துவத்தை வலியுறுத்தும் இஸ்லாம் வேறு சில விஷயங்களில் வேற் றுமையைத் திணிக்கிறது என்றுதானே நீங்கள் கூறுகி றீர்கள்?

விடை : ஆம். உலக வாழ்க்கைக்கென்று இறைவ னால் ஏற்படுத்தப்பட்ட ஏற்ற-தாழ்வுகள் சில இருக்கின் றன. இவை எப்போதும் இருக்கத்தான் வேண்டும். எனவே இவற்றை இஸ்லாம் அப்படியே விட்டுவிட்டது. இவை உலக இறுதிவரை நீடிக்கத்தான் செய்யும்; நீடிக் கத்தான் வேண்டும். பகுத்தறிவுக்கும் சமூக வாழ்வுக்கும் பொருந்தாத ஏற்ற—தாழ்வுகள் பல நம்மிடையே இருக் கின்றன. இவற்றினால் சமுதாயத்திற்குப் பயன் கிடை யாது. எனவே இவற்றை இஸ்லாம் அழிக்கிறது.

சுருங்கச் சொன்னால், எந்தப் பிரச்சினைகளில் ஒற் றுமை தேவையோ அந்தப் பிரச்சினைகளில் வேற் றுமை கிள்ளி எறியப்படுகிறது. எந்தப் பிரச்சினைகளில் வேற்றுமை தேவையோ அந்தப் பிரச்சினைகளில் படித்த தரங்கள் பிரிக்கப்படுகின்றன. அனேகமாக மனப் பண் புகள் அத்தனைக்கும் இப்படிப் பல படித்தரங்கள் இருக் கின்றன. ஏகத்துவமும் இத்தகையதுதான். ஏனெனில் ஏகத்துவக் கொள்கை என்பது மனப் பண்புகளில் ஒன்று

PDF ISLAM

சுயநலத்தை அடிப்படையாக வைத்துச் சிலர் ஏகத்துவத்துவத்திற்கு ஆதரவு கொடுத்தார்கள். வேறு சிலர் ஆத்மீக முன்னேற்றத்திற்காக ஏகத்துவத்தை நம்பினார்கள். இன்னும் சிலர் காணும் பொருள்களில் எல்லாம் இறைவனின் பெருமையைக் கண்டார்கள்.

வினா: மன்னியுங்கள். நம் தலைப்புக்கு மாறுபட்ட விதத்தில் கேள்வி கேட்பது குறித்து மன்னியுங்கள். நிற வேற்றுமை, மொழி வேற்றுமை, நாட்டு வேற்றுமை முதலியவை பற்றிச் சொன்னீர்கள் அல்லவா? அதில் ஒரு சந்தேகம். அதைத் தீர்த்துக்கொண்டு ஏகத்துவத்துக்கு வந்தால் நல்லது என்று நான் நினைக்கிறேன்.

விடை: என்ன சந்தேகம்?

வினா: அரேபியாவில் பெருமானாருக்கு முன்பிருந்தே அடிமைகள் இருந்து வந்திருக்கிறார்கள் அல்லவா?

விடை: உண்மை. பெருமானார் வந்த பின்னரும் அடிமைகள் இருந்தார்கள்.

விடை: நிறத்தாலோ குலத்தாலோ மனிதனுக்கு மனிதன் தாழ்ந்தவனல்ல என்று கூறிய பெருமானார், அடிமை ஒழிப்புக்கென்று ஏதேனும் முயற்சி செய்திருக்கிறார்களா? நபித் தோழர்களிடம் இருந்த அடிமைகளை வைத்துப் பார்க்கும்போது பெருமானார் இதற்கு முயற்சி செய்யவில்லை என்றே எண்ணத் தோன்றுகிறது. மதுவையும் சூதாட்டத்தையும் வெறுத்து ஒழித்த பெருமானார் அடிமை விற்பனைக்கு எப்படி ஆதரவு கொடுத்தார்கள் என்று எனக்குத் தெரியவில்லை.

விடை: பெருமானாரின் காலத்தில் மட்டுமன்றி, நபித் தோழர்களின் காலத்திலும் அடிமைகள் இருந்தார்கள் என்பதை நான் ஏற்றுக்கொள்கிறேன். அதற்காக, பெருமானார் அடிமை விற்பனையை வரவேற்றார்கள் என்று கூறிவிட முடியாது. மது, வெறி, மங்கையர் சல்லாபம், களவு, சூதாட்டம், விக்கிரக மோகம் முதலிய எதையும்விட அடிமைகளின் பிரச்சினை சிக்கலானது. இந்தப் பிரச்

PDF ISLAM

சினைக்கு எப்படித் தீர்வு காண வேண்டுமோ அப்படித் தான் தீர்வு காணவேண்டும். இல்லையேல் இதில் வெற்றி யடைய முடியாது.

மனத் தததுவ அடிப்படையில் பெருமானார் உருவாக் கிய சட்டம் ஒன்று இந்தப் பிரச்சினைக்கு நாளடைவில் முடிவு கட்டிற்று. இதனைச் சட்டம் போட்டுச் சாதித்து விட முடியாது. ஏனெனில் அடிமைகளை வைத்திருந்தவர் கள் அவர்களைப் பணம் கொடுத்து வாங்கியிருந்தார்கள். எனவே அவர்களை தமது சொத்து என்று நினைத்தார்கள். 'அடிமைகள் அனைவருக்கும் விடுதலை கொடுக்கப்பட வேண்டும்' என்று சட்டம் போட்டால், அதனால் பலர் நஷ்டமடைவார்கள். எனவே, தாமே விரும்பி விடுதலை கொடுக்கக்கூடிய சூழலைப் பெருமானார் ஏற்படுத்தினார் கள்.

சரி, நான் ஒன்று கேட்கலாமா? இப்போது அரேபியா விலேஅடிமைகள் இருக்கிறார்கள் என்றுநினைக்கிறீர்களா?

வினா : இப்போது அங்கு எந்த அடிமையும் கிடை யாது. ஆனால் இதற்கு பெருமானார்தான் காரணம் என்று நீங்கள் கூறுகிறீர்களா ?

விடை : ஆம்.

வினா : அதெப்படிச் சொல்ல முடியும்? இதற்குப் பெருமானார்தான் காரணம் என்றால், இதனை அவர்கள் தமது வாழ்நாளிலேயே சாதித்திருக்கலாமே?

விடை : இங்குதான் நீங்கள் இன்னும் கொஞ்சம் ஆழமாக ஆராய வேண்டும். சற்று முன் நான் குறிப்பிட் டது போல், அடிமையர் பிரச்சினை மற்ற எதையும் விடச் சிக்கலானது. அவர்கள் மிக அதிகமாக இருந்தார்கள். தவிர, பெருமானாருக்கும் நபித் தோழர்களுக்கும். இதை விடப் பெரிய பிரச்சினைகள் காத்துக்கொண்டிருந்தன.

அடிமைத்துவம் குறித்து ஒரு முடிவுக்கு வருமுன், அவர்கள் எப்படி நடத்தப்பட்டார்கள், ஏன் அடிமையாக் கப்பட்டார்கள் என்று தெரிந்துகொள்வது நல்லது.

PDF ISLAM

இவற்றை நாம் தெரிந்துகொள்ளவில்லை என்றால், இதில் நமக்கு நிச்சயமாகத் தெளிவு கிடைக்காது.

அவர்கள் அடிமைகள் என்று அழைக்கப்பட்டார்கள். கல்வியறிவும் நாகரீக வாழ்வும் இல்லாத அவர்களை மக்கள் இழிவுக் கண்கொண்டு பார்த்தார்கள். அவர்களின் சொந்த விருப்பு வெறுப்புக்கு மதிப்புக் கொடுக்கப்பட வில்லை.

இந்த நிலைமை அவர்களுக்கு ஏன் ஏற்பட்டது? இறைவன் வேண்டுமென்றே இவர்களை அப்படிப் படைத்துவிட்டானா? அல்லது, தாமாகவே அவர்கள் அந்த நிலையைத் தேடிக்கொண்டார்களா? அப்படியும் இல்லாவிட்டால், மற்றவர்களால் அவர்கள் இந்த நிலைக்குக் கொண்டுவரப் பட்டிருக்கிறார்களா?

இறைவன் வேண்டுமென்றே அவர்களை மனிதனுக்கு அடிமைகளாகப் படைத்துவிட்டான் என்று கூறுவது அறியாமை. ஏனெனில் மனிதனுக்கு மனிதன் எந்தக் கோணத்திலிருந்தும் அடிமைப்பட முடியாது என்பது அவனுடைய தீர்ப்பு. ஒரு தேசத்து மக்களை உயர்ந்தவர்கள் என்றும் மற்றொரு தேசத்து மக்களைத் தாழ்ந்தவர்கள் என்றும் அவன் கூறியிருக்க முடியாது. அவனுக்கு மனிதர்கள் அனைவரும் அடிமைகள். ஆனால் மனிதரில் சிலர் வேறு சிலருக்கு அடிமைகளாக இருக்க முடியாது.

அடிமைகள் எனக் கருதப்பட்ட அவர்கள் தமக்குத் தாமாக அந்த நிலையை ஏற்படுத்திக் கொண்டார்கள் என்று கூறுவதும் தவறுதான். ஏனெனில் எந்த மனிதனும் தன்னுடைய சுதந்திரத்தை இழக்க விரும்புவதில்லை. அவன் போதிய அளவுக்குக் கல்வியறிவு இல்லாதவனாக இருக்கலாம்; நாகரீக வாழ்வுக்கும் அவனுக்கும் சம்பந்தமே இல்லாமல் இருக்கலாம். ஆனால் இந்தப் பலவீனத்தைப் பார்த்த மற்றவர்கள் அவர்களின் உரிமையைப் பறிக்கலாமா?

அவர்களுக்கு எதை எதையோ காட்டி அவர்களை அழைத்து வந்து விற்று விட்டார்கள் புத்திசாலிகள்.

PDF ISLAM

இப்படித்தான் பிலாலின் முன்னோர், சுஹைபின் முன்னோர், அம்மாரின் முன்னோர் எல்லோரும் அரேபிய மண்ணுக்கு அழைத்துவரப்பட்டார்கள்; செல்வர்களின் பணத்துக்குப் பதிலாக விற்கப்பட்டார்கள்—ஆடு மாடுகளைப் போல, கொக்கு குருவிகளைப் போல, உயிரற்ற உருளைக் கிழங்குகளைப் போல நடு வீதியில் விற்கப்பட்டார்கள். கரிய மேனியினாலோ தடித்துப் பருத்த உதடுகளினாலோ அருவருக்கத்தக்க உருவ அமைப்பினாலோ அவர்கள் ஒதுக்கி வைக்கப்பட்டார்கள்.

அவர்களைப் பணம் கொடுத்து வாங்கிய வர்த்தகர்களின் மனோநிலை இன்னும் விசித்திரமாக இருந்தது. அவர்கள் அந்த நீக்ரோவர்களைத் தமது உடமை என்று நினைத்தார்கள். ‘பணம் கொடுத்து வாங்கப்படும் பொருள்கள் பணம் கொடுத்தவரின் உடைமைதான் என்பதில் என்ன சந்தேகம்?’ என்று வாதித்தார்கள். ஆரோக்கியமும் உடல் வலிமையும் பொருந்திய நீக்ரோவர்கள் கடினமான வேலைகளுக்குப் பயன்படுத்தப்பட்டனர்.

பெருமானாரின் காலத்தில் இருந்த அடிமைகள் அனைவரும் புதிதாக அடிமைப்படுத்தப்பட்டவர்கள் அல்லர். நீண்ட நாட்களுக்கு முன்பே அவர்களின் மூதாதையர் அடிமையாக்கப்பட்டு அரேபியாவிற்குக் கொண்டு வரப்பட்டிருந்தனர். இதனால் அவர்களுக்குப் பிறந்த குழந்தைகள் அனைத்தும் அடிமைத் தளைக்குள் தாமாகவே நுழைந்துவிட்டன.

இந்த நிலைமைக் கட்டோடு அழிப்பது அப்படியொன்றும் சாதாரணக் காரியமல்ல. அவர்கள் மீண்டும் சுதந்திரம் பெறவேண்டுமானால், முதலில் அவர்களின் எஜமானர்கள் திருந்தவேண்டும். ‘அடிமை என்று அழைக்கப்படுகிறவனும் மனிதன்தான்’ என்பதை அவர்கள் உணர்ந்து கொள்ள வேண்டும். அவர்கள் வேறு எந்தச் சலுகையும் கொடுக்க வேண்டாம். அடிமைகளை அவர்கள் தமது உடமைகள் என்று கருதாமல், தம்மைப் போன்ற மனிதர்கள் என்று நினைக்கட்டும்; அது போதும்.

PDF ISLAM

இந்த எண்ணத்தைத் தோற்றுவிப்பது மிகச் சிரமம். தலைமுறை தலைமுறையாக மனத்தில் பதிந்து போயிருக்கும் எண்ணத்தை யாராலும் எடுத்த எடுப்பில் மாற்றிவிட முடியாது.

எனவே பெருமானார் மனத்தத்துவ ரீதியாகச் செயல் பட்டார்கள்; மற்றவர்களுக்கு மாற்றமாக அடிமைகளை ஆதரித்தார்கள்; அவர்களிடம் அன்புடன் பேசினார்கள். மற்றவர்களுக்குப் பெருமானாரிடமிருந்து எந்தவிதமான கண்ணியம் கிடைத்ததோ அதே விதமான கண்ணியம் அடிமைகளுக்கும் பெருமானாரிடமிருந்து கிடைத்தது. குலத்திலும் பணத்திலும் உயர்ந்த அரபியர்களுக்கு அருகில் அமர்ந்து விருந்துண்ணும் பேறு அவர்களுக்குக் கொடுக்கப்பட்டது. உலக வரலாற்றில் முன்னர் எங்கும் நடந்திராத அற்புதம் இது.

"ஏழைகளுக்கு அன்பு காட்டுங்கள். அடிமைகளை ஆதரியுங்கள். வேர்வை மறையுமுன் கூலியைக் கொடுங்கள்" பெருமானார் வாயால் மட்டுமன்றி, செயலாலும் அறிவுரை கூறினார்கள். அரேபியர்களின் எண்ணத்தில் புரட்சி தோன்றுவதற்கு இது காரணமாக அமைந்தது.

இதையடுத்துப் பெருமானார் மற்றொரு காரியம் செய்தார்கள். தவறு செய்வது மனிதனின் இயல்பல்லவா? தவறு செய்துவிட்டவர்களுக்கு ஓர் அபராதமும் இருக்கிறதல்லவா? இந்த இரண்டையும் வைத்துப் பெருமானார் அடிமையரின் பிரச்சினைக்கு முடிவு கண்டார்கள்.

"அபராதம் செலுத்தக் கடமைப்பட்டவர்கள் தம்மிடமுள்ள அடிமைகளில் ஒருவருக்குச் சுதந்திரம் அளித்தால் போதும்" என்று தீர்ப்பு வழங்கினார்கள்

இந்தத் தீர்ப்புக்கு உயிர் போன்றது அடுத்து வரும் சட்டம்: "ஒருதரம் சுதந்திரம் கிடைத்துவிட்டால் அப்புறம் என்றைக்கும் அடிமைத்துவம் கிடையாது."

தெரிந்தோ தெரியாமலோ மக்கள் தவறு செய்தார்கள். இந்த பொது நியதிக்கு ஏழை—பணக்காரன் என்று எந்த வேற்றுமையும் கிடையாது. தவறு செய்து விட்ட ஏழைகள் கலங்கிக்கொண்டிருந்த வேளையில்,

PDF ISLAM

தவறு செய்துவிட்ட பணக்காரர்கள் தம்மிடமிருந்த அடிமைகளில் ஒருவருக்கு விடுதலை அளித்துக்கொண்டிருந்தார்கள்.

இதனால் முஸ்லிம்களிடமிருந்த அடிமைகளின் எண்ணிக்கை படிப்படியாகக் குறைந்து வந்தது. பெருமானார் அடைந்த வெற்றிகளில் மக்கா வெற்றி முக்கியமானது. அப்போது கண்ணெட்டிய தூரம் வரை முஸ்லிம்கள் காணப்பட்டார்கள். இந்தக் கட்டத்தில் அடிமைகளின் எண்ணிக்கை மிகக் குறைவாகவே இருந்தது.

பெருமானார் தமது வாநாளிலேயே அடிமைகளின் பிரச்சினைகளில் கிட்டத்தட்ட வெற்றியடைந்துவிட்டார்கள். என்றாலும் பெருமானாரின் மறைவுக்குப் பின்னர் தான் முழு வெற்றி மலர்ந்தது.

எனவே, இன்றைக்கு அரேபியாவிலே அடிமைகளே கிடையாது என்றால் அதற்கு அடிப்படைக் காரணம் பெருமானார்தான்.

வினா: மனிதனை மனிதன் விற்கக் கூடாது என்று தானே கூறுகிறீர்கள்?

வினா: ஆம்.

வினா: ஏன்?

விடை: ஏனென்றால், மனிதன் வாங்கப்படுவதற்கோ விற்கப்படுவதற்கோ தகுந்தவனல்ல. அவன் எந்த இனத்தவனானாலும் கடையில் வைத்து விற்கப்படும் பொருளல்ல. அவன் யார் தெரியுமா? இறைவனின் பிரதிநிதி. மனிதர்கள் அனைவரும் இறைவனின் பிரதிநிதிகளே? ஒரு பிரதிநிதி மற்றொரு பிரதிநிதியை விற்கவும் கூடாது; வாங்கவும் கூடாது. இப்படித்தான் இஸ்லாம் சமத்துவம் காட்டுகிறது.

வினா: அடிமையர் விற்பனை அந்தக் காலத்தில் சாதாரணமாக எங்கும் காணப்பட்டது என்று கூறினால் தவறில்லையே?

PDF ISLAM

விடை : இல்லை.

வினா: அதனை நாட்டுப் பழக்கம் என்று கூறலா மல்லவா?

விடை : தாராளமாக.

வினா: மனித விற்பனை மிக மட்டமானது என் பதுதான் என் கருத்து. இதன் அடிப்படையில்தான் நான் சற்று முன்னர் உங்களிடம் வினவினேன். ஆனால் இப்போது என் சிந்தனை வேறொரு பக்கம் செல்கிறது. மனித விற்பனையை நான் விரும்பினா லும் விரும்பாவிட்டாலும், நாட்டுப் பழக்கம் என்ற எண்ணத்துடன் பார்க்கும்போது அதில் அப்படி யொன்றும் தவறு இருப்பதாக எனக்குத் தெரியவில்லை. ஊரிலுள்ளவர்களில் பெரும்பாலோர் ஆதரவு கொடுக்கும் ஒன்றைச் சிறு பான்மையோர் தடை செய்ய முற்படுவது புத்திசாலித்தனமல்ல. ஊருடன் பகைக்கின் வேறுடன் கெடும்...

விடை : உங்கள் வினா எனக்குப் புரியவில்லை.

வினா: மனித விற்பனைக்கு இஸ்லாம் மறைமுகமாகத் தடை விதித்தது என்பதுதானே உங்கள் கருத்து?

விடை: ஆம்.

வினா! அது நாட்டுப் பழக்கம் என்பதையும் ஒப்புக் கொள்கிறீர்கள் அல்லவா?

விடை: ஒப்புக்கொள்கிறேன்.

வினா: அது நாட்டுப் பழக்கமாக இருப்பதால் அதற்குப் பெருமானார் ஆதரவு கொடுத்திருக்கலாமே?

விடை : வேடிக்கையாக இருக்கிறது உங்கள் வாதம். அடிமையாரின் பிரச்சினைக்குப் பெருமானார் முயற்சி செய்த துண்டா என்று சற்றுமுன் கேட்டீர்கள். மனித விற்ப னைக்கு ஏன் ஆதரவு கொடுக்கவில்லை என்று இப்போது கேட்கிறீர்கள்.

PDF ISLAM

வினா: நான்தான் சற்று முன் சொல்லிவிட்டேனே! மனிதாபிமானத்துக்கு மாறுபட்டது என்ற காரணத்தினுல் மனித விற்பனையை நான் வெறுக்கிறேன். இந்தக் கோணத்திலிருந்து பார்க்கும்போது அதனைத் தடை செய்துதான் தீர வேண்டும் என்று என் மனம் கூறுகிறது. அதே வேளையில், அது நாட்டுப் பழக்கம் என்பதையும் நாம் தெரிந்துகொண்டு விட்டோம். இந்தக் கட்டத்தில் நான் கேட்கும் கேள்வி இதுதான்: நாட்டுப் பழக்கம் என்ற காரணத்தினுல் மனித விற்பனைக்கு இஸ்லாம் ஆதரவு கொடுந்திருக்கக் கூடாதா?

விடை: அர்த்தமற்ற மூடக் கொள்கைகளுக்கும் பொருளற்ற பழக்க வழக்கங்களுக்கும் மனிதன் மதிப்புக் கொடுக்கக் கூடாதென்று இஸ்லாம் தீர்ப்பு வழங்கிற்று. மனிதன் என்றைக்கும் சிறப்புள்ளவன். வாங்கப்படுவதற்கோ விற்கப்படுவதற்கோ அவன் உரியவனல்லன் என்பது பகுத்தறிவு வாதம். இந்த வாதம் தான் அன்று பெருமானுரின் பிரச்சாரத்தினுல் செயலுக்குக் கொண்டு வரப்பட்டது.

நீங்கள் வாதாடுகிறீர்கள், நாட்டுப் பழக்கத்தின் அடிப்படையில் அங்கு மனித விற்பனை நடந்தது என்று. நாட்டுக்கு நாடு பழக்க வழக்கங்கள் மாறுபடுகின்றன. ஒரு நாட்டில் ஒரு பழக்கம் காணப்பட்டால், அது எவ்வளவு கொடியதாயிருந்தாலும், கண்ணை மூடிக்கொண்டு செயலாற்றலாம் என்று நீங்கள் கருதுகிறீர்களா? நாட்டுப் பழக்கத்தை மாற்ற வேண்டிய அவசியமே கிடையாது என்று நீங்கள் நினைக்கிறீர்களா? அப்படியானுல் திருத்தூதர்களுக்கும் சீர்திருத்த வாதிகளுக்கும் இந்த உலகில் வேலையே கிடையாது. ஏனெனில் உலகில் தோன்றிய திருத்தூதர்கள் அனைவரும் நாட்டில் நிலவிய பழக்க வழக்கங்களையே முதலில் எதிர்த்தார்கள். பகுத்தறிவும் சிந்தனைத் திறனும் பெற்றவன் மனிதன். பகுத்தறிவுக்கு மாறுபட்ட—சிந்தனைக்கு முறண்பட்ட பழக்க வழக்கங்களுக்கு அவன் அடிமைப்படக் கூடாது என்பது அவர்களின் கண்ணேட்டம்.

PDF ISLAM

நாட்டுக்கு நாடு திருத்தூதர்கள் தோன்றினார்கள். ஏனெனில் நாட்டுக்கு நாடு தீய பழக்கங்கள் காணப் பட்டன.

“எந்த ஒரு பகுதிக்கும் நாம் திருத்தூதரை அனுப்பா மலில்லை” என்கிறது திருக் குர்ஆன்.

உலக வரலாற்றைப் புரட்டிப் பார்க்கும்போது இந்த உண்மை நமக்கு நன்ருகத் தெரிகிறது. எந்த நாட்டிலும் அறிவுக்குப் பொருந்தாத பழக்கங்களில் ஏதேனும் ஒன்று இருக்கத்தான் செய்தது. முழுக்க முழுக்கப் பகுத்தறிவு டன் இயங்கிய ஒரு நாட்டை நம்மால் வரலாற்றில் கண்டு பிடிக்க முடியாது. நன்கு முன்னேறிய நாடுகளிலும்கூட இத்தகைய பழக்கங்கள் அங்கங்கே காணப்படுகின்றன. அந்த நாட்டு மக்களுக்கே அது நன்ருகத் தெரியும். என் ருலும், அவர்களிடம் கேட்டால், உங்களைப்போல்தான் பதில் சொல்வார்கள்: “இது நாட்டுப் பழக்கம்; சமுதாய ஆசாரம்—எனவே பின்பற்றுகிறோம்!”

கிரேக்கத்தின் அறிவுச் செல்வங்கள் இன்றைய அறி வுலகத்துக்குப் பெரிதும் துணை புரிகின்றன. கிரேக்க மொழியில் எழுதப்பட்ட பெரும்பாலான நூல்கள் இன் றைக்கு ஆங்கிலத்திலும் அரபியிலும் கிடைக்கின்றன. தத்துவ ஞானத்துக்கும் தர்க்க ஞானத்துக்கும் கிரேக்க அறிஞர்கள் வகுத்து வைதத இலக்கணம் இப்போதும் நமக்கு வழி காட்டுகிறது. பிளேட்டோவினுல் எழுதப் பட்ட 'குடியரசு' என்னும் நூலை விரும்பிப் படிக்கிறவர்கள் பல்லாயிரம்பேர். சாக்கிரடீஸின் வாக்குவாதத் திறமைக்கு இந்நூல் முழு விளக்கம் கொடுக்கிறது.

கிரேக்கக் கலாச்சாரத்தைப் பாராட்டுவதற்காக நூல் கள் எழுதிக்குவிக்கிருர்கள் ஆங்கிலேயர்கள்.

இருந்தும், சாக்ரடீஸ் தமது அறிவுப் பிரச்சாரத்தைத் தொடங்கிய ஏதென்ஸ் நகரில் பல தெய்வ வழிபாடு சாதாரணமாகக் காணப்பட்டது. இயற்கையின் சக்தி கள் ஒவ்வொன்றுக்கும் கிரேக்க மக்கள் உருவம் கொடுத் துச் சிலை செதுக்கி வழிபட்டார்கள். பல தெய்வ வழி

PDF ISLAM

பாட்டை யாரும் எதிர்க்கக் கூடாது என்று தமக்குத் தாமே சட்டம் வகுத்து வைத்துக் கொண்டார்கள். மற்ற நாடுகளில் இதுபோன்ற சட்டம் இருக்கிறதா, இல்லையா என்பது பற்றி அவர்களுக்குக் கவலையில்லை. தமக் கென்று, தமது நாட்டுக்கென்று அவர்கள் இப்படிச் சில வழக்கங்களை ஏற்படுத்தி வைத்துக் கொண்டிருந்தார் கள்; அவற்றை முறைப்படி பாதுகாத்துக் கொண்டிருந் தார்கள். இந்த வழக்கத்தை மீறியதால்தான் சாக்ரடீஸ் தண்டிக்கப்பட்டார்.

கிரேக்கத்தில் நிலவி நின்ற இந்தப் பழக்கம் நல்லதா, கெட்டதா என்று நாம் அலசிப் பார்க்க வேண்டியதில்லை. என்றாலும், "இறைவன் ஒருவனே; ஒன்றுக்கு மேற்பட்ட இறைவர்கள் இருக்க முடியாது!" என்று கூறிய ஒரே 'குற்றத்துக்காக' சிறந்த தத்துவஞானி ஒருவரை விஷம் கொடுத்துக் கொள்வது நல்ல பழக்கம் என்று நினைக் கிறீர்களா? இதை உங்கள் பகுத்தறிவு ஏற்றுக்கொள் கிறதா? நாட்டுப் பழக்கத்துக்கு எதிராகப் பிரச்சாரம் செய்கிறார்கள் என்ற காரணத்தைக் காட்டிச் சிறந்த அறி ஞர்களை எல்லாம் விஷம் கொடுத்துக் கொன்றுவிட்டால், அப்புறம் இந்த பரந்த உலகில் ஒரே ஓர் ஏகத்துவ வாதி யைக் கூடக் காண முடியாது.

இப்படிச் சிந்தனைக்குத் தடை போடும் விதத்தில் இந்தியாவிலும் ஒரு காலத்தில் பழக்க வழக்கங்கள் காணப்பட்டன. கணவன் இறந்துவிட்டால் அவனுடைய சவத்துடன் மனைவியும் எரிந்து சாம்பலாகிவிட வேண்டும் எனும் சட்டத்தை உதாரணத்திற்கு எடுத்துக் கொள்ள லாம். உண்மையில் இதனை ஒரு சட்டம் என்றே சொல்ல முடியாது. தெளிந்த சிந்தனை பெற்றவர்கள் இப்படிச் சட் டம் வகுத்திருக்க முடியாது. மனிதனின் நல்வாழ்வுக் காக இறைவனால் அருளப்பட்ட ஒரு மதத்தில் இப்படி யொரு சட்டம் காணப்பட முடியும் என்று நம்மால் கற் பனை செய்தும் பார்க்க முடியவில்லை. ஏனெனில், உலகத் திலுள்ள எந்த மதத்திலும் தற்கொலை செய்து கொள்வ தற்கு அனுமதியில்லை. உயிரற்ற பிணத்துடன் உயிரும்

PDF ISLAM

உணர்வும் உள்ள பெண்ணொருத்தி எரிந்து சாம்பலாக வேண்டும் என்று கூறுவது, தற்கொலைக்குத் தூண்டுவது போன்ற ஒரு செயல் என்பதில் என்ன சந்தேகம் இருக்க முடியும்?

எனவே, இது எந்த விதத்திலும் சட்டமல்ல. பல்லாண்டுகளாக ஊறிப்போன ஒரு பழக்கம் இப்படிச் சட்டமாகப் பரிணமித்திருக்கிறது. இந்தப் பழக்கம் ஆரம்பத்தில் எப்படி ஏற்பட்டது எனத் தீர்மானிப்பது சிரமம். கணவனுக்கு மனைவி காட்டவேண்டிய தியாக உணர்வுதான் இப்படி உருமாறியிருக்கிறதா? அல்லது, கணவன் இறந்த பிறகு அவன் மனைவிக்கு உலகில் இடம் கிடையாது என்று அர்த்தமா? அப்படியும் இல்லாவிட்டால், கணவனை இழந்துவிட்ட ஒருத்தி உலகத்தையே வெறுத்துவிட்டுத் தற்கொலை செய்துகொள்கிறாள் என்று பொருளா?

கணவனுக்கு மனைவி காட்டவேண்டிய தியாக உணர்வு சிறந்ததுதான் என்பதை நாம் ஏற்றுக்கொள்கிறோம். இதில் நமக்கு ஆட்சேபனை கிடையாது. கணவனைக் காப்பதற்காக உயிர் கொடுத்த பாரதப் பெண்மணிகளை நாம் வரலாற்றில் சந்தித்திருக்கிறோம். அப்போதெல்லாம் நமக்குக் காரணம் நன்றாகத் தெரிகிறது. இதில் பகுத்தறிவுக்கு முரண்பட்டது எதுவும் கிடையாது. மரணத்துடன் போராடும் கணவனுக்கு உயிர்த் தியாகம் செய்வது, பாரதப் பெண்மணிகளுக்கு மட்டுமன்றி, பொதுவாகப் பெண்ணினத்துக்கே சிறப்புள்ளதுதான். ஏனெனில் அவன் பிழைத்தெழுந்து நாட்டுக்கும் நாட்டு மக்களுக்கும் தொண்டு செய்யக்கூடும்; எதிர்கால உலகிற்குச் செல்வர்களைக் கொடுக்கக்கூடும்.

ஆனால் இறந்துபோன ஒருவனுக்காக அவன் மனைவி செய்யும் உயிர்த்தியாகம் எந்தப் பலனை உருவாக்குமென்று நம்மால் சொல்ல முடியாது. அவள் செய்த தியாகம் நிச்சயமாகக் கணவனுக்குப் பயன்படாது. மாண்டார் மீண்டு வரப்போவதில்லை. இதனால் நாட்டுக்கோ நாட்டு மக்களுக்கோ ஏதேனும் நன்மையுண்டா? அதுவும் கிடையாது. இதனால் ஏற்படும் ஒரே விளைவு: ஒரு பெண்ணைப்

6

PDF ISLAM

பெற்று வளர்த்து மகிழ்ந்தவர்கள், நாட்டுப் பழக்கத்தின் நச்சுப் பல்லுக் கடியில், என்ன செய்வது என்று தெரியாமல் கண்ணீர் வடிக்கிறார்கள்; வெறும் கண்ணீரல்ல— ரத்தக் கண்ணீர் !

இப்படி இறந்த கணவனின் சவத்துடன் தம்மைப் பலியிட்டுக்கொண்ட பெண்கள் அனைவரும் தியாக உணர்வுடன்தான் இருந்தார்கள் என்றும் சொல்லிவிட முடியாது. ஒரு சிலர்—மிகச் சிலர், கணவனைத் தெய்வமாக மதித்த மிகச் சிலர் இப்படி நடந்திருக்கலாம். ஆனால் பெரும்பாலான பெண்கள் இந்தப் பழக்கத்தைக் கட்டோடு வெறுத்தார்கள். தூண்டிலில் சிக்கிய மீனைப்போல் அவர்கள் துடி துடித்ததை வரலாறு நமக்குத் தெளிவாகக் காட்டுகிறது. இப்னு பதூதாவின் பிரயாணக் கட்டுரை ஒன்று இங்கு நமக்கு ஒளி கொடுக்கிறது. அவர் சொல்வதை வைத்துப் பார்க்கும்போது, பெண்களின் விருப்பு வெறுப்பைப் பொருட்படுத்தாமல் இந்த வேலை பலவந்தமாகச் செய்யப்பட்டது என்ற தீர்மானமே நமக்கு ஏற்படுகிறது. தியாகத்தையும் பலவந்தத்தையும் ஒன்று சேர்க்க முடியாது. பலவந்தத்தினால் உருவாகும் செயலைத் தியாகம் என்று சொல்ல முடியாது.

வினா : இப்னு பதூதாவா ! யார் அவர்? பெயரைப் பார்த்தால் அவரை ஓர் அரபியர் என்று எண்ணவேண்டி ஏற்படுகிறது. அரபியரான அவருக்கு இந்தியாவின் பழக்க வழக்கங்கள் எப்படித் தெரிந்திருக்க முடியும்?

விடை : பெருமானாரின் மறைவுக்குப் பின்னர் முஸ்லிம்கள் திருக்குர்ஆனின் கருத்துக்களை எல்லாம் பெரிதும் ஊன்றிக் கவனிக்க ஆரம்பித்தார்கள்; திருக்குர்ஆனின் வசனங்களில் ஆழ்ந்த சிந்தனைக்கும் நுட்பமான விரிவுரைகளுக்கும் இடமுண்டு என்பதை உணர்ந்தார்கள், ஏனெனில் திருக்குர்ஆன் என்பது இறை வேதம். இறைவனுடைய அறிவுகள் அதில் நிறைந்திருக்கின்றன. இறைவனுக்குத் தெரியாதது எதுவுமில்லை. எனவே திருக்குர்ஆனில் இல்லாதது எதுவுமில்லை என்று அவர்கள் உறுதியாக நம்பினார்கள்.

இந்த நம்பிக்கை வெகுவிரைவில் நாடெங்கிலுமுள்ள அறிஞர்களின் உள்ளத்தில் துடிப்பைத் தோற்றுவித்

PDF ISLAM

தது. அவர்கள் நம்பியதுபோல் திருக்குர்ஆனிலிருந்தே பலதரப்பட்ட அறிவுகள் பொங்கி வந்தன என்பதை வரலாற்றில் நாம் பார்க்கிறோம். இஸ்லாத்தை நம்பிய அறிஞர்களில் பெரும்பாலோர் திருக்குர்ஆனையே தமது சிந்தனைக்கு நிறுவையாக வைத்துக்கொண்டிருந்தார்கள் என்பதையும் வரலாறுதான் நமக்குக் கூறுகிறது.

இப்படித் திருக்குர்ஆனின் வசனங்களை அலசி ஆராயும் மனப்பான்மையுடன் இஸ்லாமிய அறிஞர்கள் பல்வேறு வழிகளில் இறங்கினார்கள்.

அவர்களில் சிலர் வானசாஸ்திரத்தில் இறங்கினார்கள். ஏனெனில், "உங்களுக்கு மேலே ஏழு பாதைகளை நாம் அமைத்திருக்கிறோம்!" என்று திருக்குர்ஆன் கூறிற்று.

"சந்திரனுக்குச் சில இடங்களை நாம் அமைத்திருக்கிறோம். அங்கு நீந்தி வரும் சந்திரன் இறுதியில் தேய்ந்து போன அரிவாள்போல் காட்சியளிக்கிறது. தனக்கென்று ஏற்படுத்தப்பட்டிருக்கும் எல்லைக்குள் சூரியன் இயங்குகிறது. இது அறிவு நிறைந்த இறைவனின் ஏற்பாடு" என்று பிறிதோரிடத்தில் கூறிற்று.

வேறோர் இடத்தில் திருக்குர்ஆன் இப்படிப் பேசுகிறது: "ஒட்டகம் எப்படிப் படைக்கப்பட்டிருக்கிறது, விண்ணகம் எப்படி உயர்த்தப்பட்டிருக்கிறது—என்று அவர்கள் ஆராய்ந்து பார்க்க வேண்டாமா?..."

இத்தகைய வசனங்களை ஆராயப் புகுந்தவர்கள் வான சாஸ்திரத்தில் முழு மூச்சோடு ஈடுபட்டார்கள். தம் ஆயுள் முழுவதையும் வான இயலுக்கே அளித்துவிட்ட அவர்கள் அந்தத் துறையில் மிகப்பெரும் தெளிவை ஏற்படுத்தினார்கள். அவர்கள் எழுதிய வான சாஸ்திர நூல்கள் இன்றைக்கும் போற்றப்படுகின்றன.

வேறு சிலர், "ஒவ்வொரு வியாதிக்கும் மருந்துண்டு" எனும் கருத்தைக் கண்டார்கள். எனவே அவர்கள் தம் வாழ்வை வைத்தியத் துறைக்கு அர்ப்பணித்தார்கள். அவர்கள் எழுதிய நூல்களில் சில இன்றைக்கும் வழி காட்டுகின்றன.

மற்றும் சிலர், "இறைவனே விண்ணுக்கும் மண்ணுக்கும் ஒளியாயிருக்கிறான்" எனும் இறைக் கருத்தைப் பார்த்

PDF ISLAM

தார்கள். "தன்னைத் தெரிந்து கொண்டவன் தன் நாய னைத் தெரிந்துகொண்டான்" எனும் நபிக் கருத்தைக் கவனித்தார்கள். எனவே அவர்கள் இறைவனைப் பற்றிய அறிவுகளைப் பெறுவதற்கு முயற்சி செய்தார்கள். இறை வனை நினைவுபடுத்தும் படைப்புகளில் மனிதனுக்கு முத லிடம் உண்டு என்பதை உணர்ந்த அவர்கள், மனிதனுக் கும் இறைவனுக்குமுள்ள நெருங்கிய தொடர்பை—பிரிக்க முடியாத இணைப்பை அலசி ஆராய்ந்தார்கள்.

ஜுனைதுல் பக்தாதி, இப்னு அரபி, மன்சூர் ஹல்லாஜ், அபூ ஸயீத் பிஸ்தாமீ, இமாம் கஸ்ஸாலி, மௌலானா ரூமி முதலியோர் இந்தப் பிரிவிலிருந்து வெளிப்பட்டார்கள். இஹ்யாவு உலூமித்தீன், மின்ஹாஜுல் ஆபிதீன் முத லான அரபி நூல்கள் இமாம் கஸ்ஸாலியின் சிந்தனைக்கு விளக்கம் கொடுக்கின்றன. தமது ஆராய்ச்சியை விளக்கி மௌலானா ரூமி எழுதிய மஸ்னவீ உலகப் பிரசித்தம் வாய்ந்தது. கிட்டத்தட்ட 35,000 இரண்டடிக் கவிதை கள் கொண்ட அந்தப் பெருநூல் பாரசீக மொழி தெரிந்த வர்களால் பெரிதும் பாராட்டப்படுகிறது. ஆறு பாகங் கள் கொண்ட அந்த நூலை அறிஞர்கள், 'சூபித்துவத்துக் குக் கலைக் களஞ்சியம்' என்று போற்றுகிறார்கள்.

இன்னும் சிலர், "உலகிலே நடந்து பாருங்கள். தீய வர்களின் நிலை என்னவாயிற்று என்று உங்களுக்குத் தெரியும்" எனும் இறை வசனத்தைப் பார்த்தார்கள். அறி ஞர்களில் பெரும்பாலோர் அலைந்து திரிந்து படிப்பினை பெற்றவர்களே என்பதை அவர்கள் உணர்ந்தார்கள். எனவே இந்த இறை வசனத்தின் தூண்டுதலால் அவர் கள் காடு மலைகளைக் கடந்து பிரயாணப்பட்டார்கள். இப் படிப் பிரயாணப்பட்டவர்கள் பலர். அவர்களில் இப்னு பதூதாவுக்கு மிகப்பெரும் சிறப்புண்டு. அவரை மிகப்பெ ரும் பிரயாணி என்று வரலாற்று நூல்கள் குறிப்பிடு கின்றன.

தாஞ்சியர் எனும் கிராமத்தில் பிறந்த இப்னு பதூதா 1325-ல் பிரயாணப்பட்டார். அப்போது அவருக்கு வயது கிட்டத்தட்ட 21. அலக்ஸாண்டிரியா, கெய்ரோ, பாலஸ் தீனம், திமக்ஷ், மக்கா, மதீனா, பஸ்ரா முதலிய இடங் களுக்குச் சுற்றியலைந்த இப்னு பதூதா, நீண்ட மக்கத்

PDF ISLAM

தொடரைக் கடந்து இஸ்பஹானுக்குச் சென்றார். அங்கிருந்து கூபா, பக்தாத் முதலிய வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த நகரங்களுக்குச் சென்றார். 1333-ல் அவர் சிந்து நதிப் பிராந்தியத்திற்கு வந்தபோது டில்லியிலிருந்து முஹம்மது துக்லக் ஆட்சிசெய்துகொண்டிருந்தார். ஏறத்தாழ 28 ஆண்டுகள் நாடெங்கிலும் சுற்றிய இப்னுபதூதா 1345-ல் தம் பிரயாணத்தை முடித்துக்கொண்டார். 75,000 மைல்களைக் கால் நடையாகவே கடந்துவிட்ட அவர், முஹம்மது இப்னு ஜுஸையின் ஒத்துழைப்புடன் தம் பிரயாணத்தைப் பற்றி ஒரு நூல் எழுதினார். இந்த வேலை 1355-ல் துவங்கிற்று. பிரயாண நூல்களில் இப்னு பதூதாவின் நூலுக்குத் தனிப் பெருமையுண்டு. பிரயாண இலக்கியத்துக்குப் புதியதொரு நூலைச் சேர்த்துவிட்ட திருப்தியுடன் அவர் 1377-ல் காலமானார்.

வினா: இப்னு பதூதாவுக்கும் இந்தியாவில் நடந்த உடன் கட்டைப் பழக்கத்துக்கும் என்ன சம்பந்தம் என்று எனக்குத் தெரியவில்லையே?

விடை: இப்னு பதூதா இந்தியாவில் பிரயாணம் செய்துகொண்டிருந்த காலத்தில்தான், பிணத்துடன் உயிருள்ளவரை எரிக்கும் பழக்கம் இங்கு காணப்பட்டது. இப்னு பதூதா தம் கண்களால் கண்ட சம்பவம் ஒன்றைத் தமது பிரயாண நூலில் விளக்குகிறார்.

ஒருநாள் சிந்து நதியையொட்டி நடந்துகொண்டிருந்த இப்னு பதூதா ஒரு காட்டுக்குள் நுழைகிறார். வெகு தூரத்திலிருந்து சங்கீத ஓசை காற்றில் மிதந்து வருகிறது. ஓசை வந்த திசையை நோக்கி அவரது கால்கள் நடக்கின்றன. வர வர ஓசை அதிகரிக்கிறது. சற்று முன் சங்கீதம்போல் தோன்றிய ஓசை இப்போது பயங்கரமாகக் கேட்கிறது. இப்னு பதூதா விரைந்து நடக்கிறார்.

அப்போதுதான் அவரது பார்வையில் அந்தக் குழு தென்பட்டது. கூடிநின்ற கும்பலுக்கு மத்தியிலிருந்து நெருப்பும் புகையும் வெளியேறிக்கொண்டிருந்தன. கூடியிருந்தவர்களில் சிலர் 'டாம்டும்' என்று கண்டபடி இசை எழுப்பினார்கள். அதனை இப்னு பதூதாவினால் ரசிக்க முடியவில்லை. ரசிப்பதற்காக அந்தச் சத்தம் எழுப்பப்பட

PDF ISLAM

வில்லை என்பதை அவர் சிறிது நேரத்தில் சுத்தமாகத் தெரிந்துகொண்டார்.

இப்போது இப்னு பதூதா கூட்டத்துக்கு அருகில் நின்றார். கூட்டத்துக்கு நடுவில் ஒரு பிணம் எரிந்து கொண்டிருந்தது. அந்தப் பிணத்துடன் இளம் பெண் ஒருத்தி சேர்த்துக் கட்டிவைக்கப்பட்டிருந்தாள். பற்றி எரியும் நெருப்பு அதிகப்படவேண்டும் என்பதற்காக, கூடி நின்றவர்கள் நெய்யை அள்ளியள்ளி ஊற்றினார்கள். பிணத்துடன் சேர்த்துக் கட்டிவைக்கப்பட்டிருந்த அந்தப் பெண், தன் குரலின் சக்தி முழுவதையும் சேர்த்துக் கத்தியதை இப்னுபதூதா பார்த்தார். ஆனால் அவள் குரலை அவரால் கேட்க முடியவில்லை. இப்போது அவருக்கு ஓர் உண்மை தெரிந்தது; அவளது ஒப்பாரி, ஈனக் கதறல் மற்றவர்களுக்குக் கேட்கக் கூடாது என்பதற்காகவே அங்கு நின்றவர்கள் கண்டபடி ஒலி எழுப்பியிருக்க வேண்டும்...

—இந்தக் குறிப்பை வைத்துப் பார்க்கும்போது, இந்த வேலை பலவந்தமாக நடந்தது என்ற தீர்மானமே நமக்கு ஏற்படுகிறது. இல்லையேல் அவளைப் பிணத்துடன கட்டிவைக்கவேண்டிய அவசியமில்லை யல்லவா ?

எனவே இதனைத் தியாகம் என்று சொல்ல முடியாது. ஏனெனில் இங்கு பலவந்தம் காணப்படுகிறது தியாகமும் பலவந்தமும் ஒரே நேரத்தில் ஒன்று சேர முடியாது.

வினா : உங்கள் கருத்து இன்னும் எனக்குச் சரியாகப் புரியவில்லை. நாட்டுக்கு நாடு பழக்க வழக்கங்கள் மாறுபடுகின்றன என்பதை நானும் ஏற்றுக்கொள்கிறேன்; இத்தகைய பழக்க வழக்கங்களில் அறிவுக்குப் பொருந்தாததைத் தடை செய்வதற்காகத்தான் திருத்தூதர்கள் உலகில் தோன்றினார்கள் என்று சொல்கிறீர்களா?

விடை : பகுத்தறிவுக்குப் பொருந்தாத பழக்க வழக்கங்களைத் தடை செய்வது திருத்தூதர்களின் வேலைகளில் ஒன்று என்றே நான் சொல்கிறேன். திருத்தூதர்களின் தோற்றத்திற்கு இது ஒன்றுதான் காரணம் என்று என்னால் சொல்ல முடியாது. இதைத் தவிர்த்து அவர்களுக்கு இன்னும் எத்தனையோ வேலைகள் இருக்கின்றன. மக்களிடையே காணப்படும் தீய பழக்க வழக்கங்

PDF ISLAM

களைத் தடை செய்துவிடுவதால் மட்டும் சமுதாயம் முன்னேறிவிட முடியாது. அந்த இடத்தில் நல்ல பழக்கங்களும் உருவாக வேண்டும். பகுத்தறிவுக்கு மாறுபட்ட வேலைகளைச் செய்யாதிருப்பவர்களை நாம் புத்திசாலிகள் என்று சொல்வதில்லை. மாறாக பகுத்தறிவுக்குப் பொருத்தமான வேலைகளைச் செய்யும் செயல் வீரர்களையே நாம் புத்திசாலிகள் என்று குறிப்பிடுகிறோம்.

இதுபோலவே, ஒரு சமுதாயத்தில் தீய பழக்கமே இல்லை என்பதால் மட்டும் அதனைச் சிறந்த சமுதாயம் என்று சொல்லிவிட முடியாது. உயர்ந்த பழக்க வழக்கங்களை ஏற்படுத்தி வைத்திருக்கும் சமுதாயத்தையே நாம் சிறந்த சமுதாயம் என்று குறிப்பிடுகிறோம். திருத்தூதர்களின் கூற்றுக்களை ஆராய்ந்து பார்க்கிறவர்கள் இந்த உண்மையைக் காணத் தவறுவதில்லை.

வினா : ஒரு சமுதாயத்தை எதை வைத்துப் பாராட்டுகிறீர்கள்? எந்தச் சமுதாயத்திலும் ஏதாவது ஒரு கோளாறு இருக்கத்தான் செய்கிறது என்று பொருள் படும்படி சற்றுமுன் கூறினீர்கள். நாட்டுக்கு நாடு மூடப் பழக்க வழக்கங்கள் காணப்படுகின்றன என்றும், மூடப் பழக்கமே இல்லாத அற்புத நாட்டைப் பார்க்க முடியாது என்றும் கூறியிருக்கிறீர்கள். அப்படியானால் உங்கள் கருத்தென்ன ?

விடை : முதலில் நீங்கள் நாட்டைப் பார்க்க வேண்டாம். முதன் முதலில் உங்கள் கவனத்திற்குரியது தனிப்பட்ட மனிதனின் வாழ்க்கை. தனிப்பட்ட மனிதர்கள் ஒன்றுபடும்போது குடும்பம் ஏற்படுகிறது. இது தனிப்பட்ட குடும்பம். தனிப்பட்ட குடும்பங்கள் பல ஒன்று சேரும்போது சமுதாயம் உருப்பெறுகிறது. இது தனிப்பட்ட சமுதாயம். தனிப்பட்ட சமுதாயங்கள் பல ஒன்றுபடும்போது நாடு உருப்பெறுகிறது. எனவே ஒரு நாட்டில் காணப்படும் பழக்க வழக்கங்களுக்கு அந்நாட்டில் வாழும் மக்களே பொறுப்பாளிகள். அவர்கள் நல்ல வழியில் நடந்தால் அவர்கள் வாழும் நாட்டிற்கு நற்பெயர் கிடைக்கும். அவர்கள் தீய வழியைத் தேர்ந்தெடுத்தால் அவர்கள் வாழும் நாட்டிற்கு நிச்சயமாகக் கெட்ட பெயருண்டு.

PDF ISLAM

ஒரு நாட்டில் மது வகைகள் சர்வ சாதாரணமாக உபயோகிக்கப்படுகின்றன என்றால், அந்த நாட்டில் வாழும் மக்களில் பலர் அப்படி நடந்துகொள்கிறார்கள் என்பதே பொருள். போதைப் பொருள்களை வெறுக்கிறவர்களும் அங்கு இருக்கத்தான் செய்வார்கள் என்றாலும் அவர்கள் சிறுபான்மையோர்.

இதேபோன்று, ஒரு நாட்டில் நல்ல பழக்க வழக்கங்கள் நிரம்பியிருக்கின்றன என்றால், அந்த நாட்டில் வாழும் மக்களில் பெரும்பாலோர் அப்படி நடந்துகொள்கிறார்கள் என்பதே பொருள். முழுக்க முழுக்கத் தீய பழக்கங்களைக் குணமாகக் கொண்டவர்களும் அங்கு இருக்கத்தான் செய்வார்கள் என்றாலும், அவர்கள் சிறுபான்மையோர்.

எனவே, முதல் நாடு இகழப்படும் அதே நேரத்தில் இரண்டாம் நாடு புகழப்படுகிறது. இப்படி ஒரு நாட்டுக்கு ஏற்படும் நிந்தனையும் பாராட்டும் அந்த நாட்டில் வசிக்கும் மக்களைப் பொறுத்தே உருவாகின்றன. இந்தப் பொறுப்புக்கு ஒவ்வொரு மனிதனும் பதில் சொல்லவேண்டி ஏற்படும். ஏனெனில் தனிப்பட்ட மனிதன், சமுதாயத்தில் ஒரு பகுதி; சமுதாயம், நாட்டில் ஒரு பகுதி.

இதனை நபிக் கருத்து ஒன்று தெளிவுபடுத்துகிறது: "இஸ்லாமிய சமுதாயத்தைத் தனி மனிதன் ஒருவனுக்கு ஒப்பிடலாம். அவனுடைய உறுப்பு ஒன்றில் தோன்றும் வேதனை உடல் முழுவதும் பரவுவதுபோல், தனிப்பட்ட முஸ்லிம் ஒருவன் செய்யும் காரியம் இஸ்லாமிய சமுதாயத்தையே பாதிக்கிறது."

எனவே நாட்டைப் பற்றியும் நாட்டுப் பழக்க வழக்கங்களைப் பற்றியும் பேசுவதைவிடத் தனி மனிதனைப் பற்றியும் அவனுடைய பழக்க வழக்கங்களைப் பற்றியும் பேசுவது நல்லது என்று நான் நினைக்கிறேன். ஒரு நாட்டில் தோன்றும் விளைவுகள் அத்தனையும்—அவை நல்லவையானாலும் கெட்டவையானாலும்—முதன் முதலில் தனி மனிதன் ஒருவனின் உள்ளத்தில் தோன்றியவைதான். ஒரு நாட்டிலுள்ள தனி மனிதர்கள் அனைவரும் திருந்தி விட்டால், அந்த நாடே திருந்திவிட்டது என்று துணிந்து கூறலாம். தனி மனிதர்கள் இல்லை என்றால், நாடு என்று

PDF ISLAM

ஒன்று இருக்கமுடியாது. மக்களில்லாத வெறும் நிலப் பரப்பை இங்கு நாம் நாடு என்று குறிப்பிடவில்லை.

நாட்டு மக்களுக்கு மத்தியில் தோன்றும் ஒரே ஒரு வீரன் அவர்கள் அனைவரையும் வீரர்களாக்கக்கூடும். சிந்தனையிழந்த சமுதாயத்தில் தோன்றும் ஒரே ஓர் அறிஞன் அவர்கள் அனைவரையும் சிந்தனையின் பக்கம் இழுக்கக் கூடும். முரண் வழியில் நடக்கும் சமுதாயத்தில் தோன்றும் ஒரே ஒரு திருத்தூதர் வரலாற்றின் முகத்தையே திருப்பி வைத்துவிடக்கூடும்; ஏகத்துவத்தின் பெருமையை மக்களின் மனத்தில் பதித்துவிடக்கூடும்.

இந்தக் கடைசி இனத்தைச் சேர்ந்தவரே பெருமானார். 23-ஆண்டுகளில் அவர்கள் தம் சமுதாயத்தில் தோற்றுவித்த மாறுதல் என்றைக்கும் மறக்க முடியாதது. அவர்களின் சாதனைகளுக்கு வரலாறு ஏடுகள் இன்றைக்கும் சான்று கூறுகின்றன. சீர்திருத்தவாதிகளின் பட்டியலில் முதலிடம் பெற்றிருக்கும் பெருமானார் தனிப்பட்ட தொரு மனிதர்தான். உருவாக வேண்டிய சீர்திருத்தங்கள் அத்தனையும் முதன் முதலில் அவர்களின் உள்ளத்தில்தான் தோன்றின. அவர்களது உள்ளத்தில் இறைவனால் திணிக்கப்பட்ட அக் கருத்துக்கள் ஒரு நாட்டை அல்ல— உலகத்தையே திருத்தியமைத்து விட்டன.

ஆனால் சிந்தனையாளர்கள் அனைவருக்கும் இது சாத்தியம் என்று நான் நினைக்கவில்லை. சமுதாயத்தின் எதிர்ப்புக்கு அஞ்சி உண்மையை விழுங்கி விட்டவர்கள் சிந்தனைச் செல்வர்களில் பலர். இவர்களுக்குச் சிந்திக்கத் தான் தெரியுமே தவிர, செயலாற்றத் தெரியாது. சமுதாயத்தின் கருத்துக்காகத் தம் கருத்தையே மாற்றிக் கொண்டவர்களும் பலர் இருக்கிறார்கள். இத்தகையவர்களால் நாட்டுக்கோ நாட்டு மக்களுக்கோ எவ்வித நன்மையும் கிடையாது. இவர்களின் சிந்தனைக்கு எந்த மதிப்பும் கிடையாது. ஏனெனில் இந்தச் சிந்தனை செயலுருத் தாங்கவில்லை. இவர்களின் சிந்தனையை மின்னலுக்கு ஒப்பிடலாம். மின்னலின் வெளிச்சத்தை நம்பிக்கொண்டு எதுவும் செய்ய முடியாது. அது தோன்றியதும் மறைந்து விடும் இவர்களின் உள்ளத்தில் தோன்றும் சிந்தனை

PDF ISLAM

எவ்வளவு உயர்ந்ததாக இருந்தாலும், அது முறையான செயலுருத் தாங்காத காரணத்தால், அது சமுதாயத்துக்கு எவ்வித நன்மையும் செய்வதில்லை.

எந்தச் சமுதாயத்தின் சிந்தனைச் செல்வர்கள் அனை வரும் செயல்வீரர்களாக இருக்கிறார்களோ அந்தச் சமுதாயமே சிறந்தது. இஸ்லாமியப் பேரரசு பரவி விரிந்ததற்கும் இதுதான் காரணம். நபித்தோழர்களில் பலர் சிறந்த சிந்தனைச் செல்வர்களாக இருந்தார்கள் அதே நேரத்தில் அவர்கள் செயல் திறனும் பெற்றிருந்தார்கள்.

அண்ணலார் வாழ்ந்த அரேபிய நாட்டில் சிந்தனைச் செல்வர்களும் இருக்கத்தான் செய்தார்கள். ஏகத்துவத்தை அவர்கள் மனப்பூர்வமாக நம்பினார்கள் ; விக்கிரக வணக்கத்தை வெறுத்தார்கள்; மனிதனால் உருவாக்கப் பட்ட சிலையொன்று அவனுக்காக மறுமையில் மன்றாட முடியும் என்பதை மறுத்தார்கள். ஆனால் ஒன்று—அவர்கள் தம் கருத்தை மற்றவர்களிடம் கூறவில்லை.

வினா அப்படியானால் அவர்களுக்கு ஏகத்துவத்தில் நம்பிக்கை இல்லையா ?

விடை : நான்தான் சொல்லி விட்டேனே, "ஏகத்துவத்தை அவர்கள் மனப்பூர்வமாக நம்பினார்கள்" என்று! எனவே நீங்கள் கேட்டது தேவையில்லாத கேள்வி.

வினா. அவர்களுக்கு நம்பிக்கை இருந்திருந்தால் அதை ஏன் மற்றவர்களிடம் கூறியிருக்கக்கூடாது ?

விடை : அவர்களை ஏன் நீங்கள் வம்புக்கு இழுக்கிறீர்கள் ? உதாரணத்திற்கு உங்களையே எடுத்துக் கொள்ளுங்கள். நீங்கள் கலந்து வாழும் சமுதாயம் உங்களுக்கு விசித்திரமானதாகத் தெரிகிறது. அவர்கள் பழகும் முறை, அவர்களின் பழக்க வழக்கங்கள், அவர்களின் சிந்தனை யோட்டம் அத்தனையும் உங்கள் கருத்துக்கு முற்றிலும் மாறுபட்டிருக்கின்றன. உங்கள் கருத்தை ஆதரிக்கிறவர்கள் யாருமே யில்லை—அல்லது உங்கள் கருத்தை ஆதரிக்கிறவர்கள் அதிகமாக இல்லை. அப்படி ஆதரிக்கிறவர்களும் தம் கருத்தை மற்றவர்களிடம் துணிந்து கூறுவார்கள் என்று உங்களுக்கு நம்பிக்கை யில்லை

PDF ISLAM

இப்படி யொரு சூழல் உங்களுக்கு ஏற்படுவதாக வைத்துக் கொள்வோம். இந்தக் கட்டத்தில் உங்கள் கருத்தை மற்றவர்களிடம் கூறமுடியுமா?

வினு: என்னை எதிர்க்கிறவர்களிடம் என் கருத்தை நான் கூறமுடியாது. இதுவே அறிவுடைமை என்று நான் நினைக்கிறேன்; ஆனால் என் கருத்தை ஆதரிக்கிற வர்களிடம் நிச்சயமாகக் கூறலாம்.

விடை: எதிர்க்கிறவர்களை விட ஆதரிக்கிறவர்கள் குறைவு என்று நாம் வைத்துக் கொண்டோமல்லவா? ஆதரவாளர்களின் துணிவு எத்தகையது என்று உங்க ளுக்கு நிச்சயமாகத் தெரியாது. பெரும்பான்மையோ ருக்கு எதிராகக் கருத்துக் கொண்டிருக்கும் அவர்கள் பொது மக்களின் கருத்துக்கு அஞ்சி நடுங்குகிறவர்க ளாக இருந்தால் என்ன செய்வீர்கள்?

வினு: இது கோழைத்தனமாயிற்றே?

விடை: இருக்கலாம். உயர்ந்த கருத்துக்களை ஆத ரிக்கிறவர்களில் பலர், சூழ்நிலையின் விளைவால் கோழை களாக மாறிவிடுகிறார்கள்

வினு: என்னை ஆதரிக்கிறவர்கள் எதற்காகப் பொது மக்களுக்குப் பயப்படவேண்டும்? எனக்கு ஒன்றும் புரியவில்லையே! என்னை ஆதரிப்பதால் அவர்களுக்கு மக்களிடமிருந்து எந்தத் தீங்கும் ஏற்பட முடியாதே! இப்படியிருக்க, எதற்காகப் பயப்பட வேண்டும்?

விடை: உங்களுக்கு ஆதரவாகக் கருத்துக்கொண் டிருப்பதால் அவர்கள் பயப்படவில்லை; அப்படிப் பயப்பட வேண்டிய தேவையுமில்லை. பொது மக்களின் கருத்துக் குத் தம் கருத்து எதிரானது என்பதால் அவர்கள் பயப் படக் கூடுமல்லவா? பொது மக்களின் கருத்துக்கு நேர் எதிராக நீங்கள் கருத்துக் கொண்டிருக்கிறீர்கள். புரட்சி கரமான உங்கள் கருத்தை—பொது மக்களில் பெரும்பா லோர் ஆதரிக்காத கருத்தை அந்தச் சிறுபான்மையோர் ஆதரிக்கிறார்கள். எனவே அவர்கள் ஒருவிதத்தில் பொது மக்களுக்கு விரோதிகளல்லவா? தம் விரோதிகள் என்ற முறையில். தமது மூதாதையரின் மார்க்கத்தை எதிர்ப்ப

PDF ISLAM

வர்கள் என்ற முறையில் உங்கள் ஆதரவாளர்களுக்குப் பொது மக்கள் எந்தத் துன்பமும் கொடுக்க முடியும் என்பதை நீங்கள் மறுக்கிறீர்களா ?

வினா : இல்லை. ஆனால் என் கருத்தை என் ஆதரவாளர்களிடம் கூறுவதில் அப்படி எந்த ஆபத்தும் இருப்பதாகத் தெரியவில்லையே ?

விடை : உண்மைதான். நீங்கள் சொல்வது போலவே வைத்துக் கொள்வோம். உங்கள் கருத்தை உங்கள் நண்பர்களிடம், ஆதரவாளர்களிடம் மட்டுமே கூறுகிறீர்கள் அல்லவா ? அவர்கள் பொதுமக்களுக்கு எதிராக இயங்க விரும்பாததால், உங்கள் கருத்தையும் அதற்குத் தாம் கொடுத்த ஆதரவையும் மூடி மறைத்து விட்டால் ஆச்சரியப்படுவதற்கில்லை ஏனெனில் சமுதாயத்திற்கு எதிரான அந்தக் கருத்தை வெளியிட்டால் உங்களுக்கும் அவர்களுக்கும் தொந்தரவு ஏற்படும். உங்களுக்கு ஏற்கெனவே சமுதாயத்தில் இருந்த கண்ணியத்துக்கு ஆபத்து ஏற்படும்.

வினா : புரிகிறது. அண்ணலாரின் காலத்தில் ஏகத்துவத்தை நம்பியவர்கள் பொது மக்களுக்குப் பயந்து தான்—தமக்கிருக்கும் கண்ணியம் பறிபோய்விடுமோ என்று பயந்துதான் தம் கருத்தை மறைத்தார்கள் என்று தானே கூறுகிறீர்கள் ?

விடை : ஆம். இந்த இனத்தைச் சேர்ந்தவரே வரகா பின் நவ்பல். கதீஜா நாயகிக்கு அவர் உறவுக்காரர். அவரது சிந்தனை உண்மையிலேயே தெளிவானது.

வினா : வரகா என்ற அந்த மனிதர் ஏகத்துவம் பற்றிப் பிரச்சாரம் செய்தாரா ?

விடை : இல்லை. அவர் பிரச்சார வழியில் இறங்கினார் என்பதற்கு ஆதாரமில்லை.

வினா : அவரை மக்கள் வெறுத்தார்களா ?

விடை : அப்படியுமில்லை. தாமுண்டு தம் ஆராய்ச்சியுண்டு என்று அவர் ஒதுங்கி வாழ்ந்தார். அவரை மக்கள் நல்லவர் என்றார்கள் ; அவரது சிந்தனையைப் போற்றினார்கள்.

PDF ISLAM

வினா : வரகா ஏகத்துவப் பிரச்சாரமும் செய்யவில்லை. மக்களால் வெறுக்கப்படவுமில்லை என்று கூறுகிறீர்கள். அப்படியானால்; அவர் ஏகத்துவத்தை நம்பினார் என்று எப்படிச் சொல்கிறீர்கள் ?

விடை : இந்தக் கேள்விக்கு விடை காண வேண்டுமென்றால், நாம் வரலாற்றின் ஏடுகளில் ஒன்றைத் திருப்ப வேண்டும். இஸ்லாத்தின் ஆரம்ப வரலாற்றின் ஒளியில் பார்க்கும்போது வரகாவைப் பற்றிய உயர்ந்த கருத்து நமக்கு ஏற்படுகிறது. அறிமுகமில்லாத புதுப் பொறுப்பு ஒன்றை இறைவன் தம் தலையில் சுமத்துகிறான் என்பதை உணர்ந்த பெருமானார் பெரிதும் கலங்கினார்கள். இந்த இக்கட்டான நேரத்தில் பெருமானாருக்கு ஆறுதல் கூறிய மிகச் சிலரில் வரகாவும் ஒருவர்.

வினா : பெருமானார் பொறுப்பைப் பார்த்துக் கலங்கினார்களா! ஏன் கலங்க வேண்டும் ?

விடை : ஏனெனில் தமக்கு நபித்துவம் கிடைக்கப் போகிறது என்று அவர்களுக்கு அறவே தெரியாது. தமது நாற்பதாம் வயதில் ஹிரா எனும் குகையில் அவர்கள் திடீரென்று வானவர் ஒருவரைக் கண்டபோது அவர்களின் உடல் முழுவதும் நடுங்கிற்று...

வினா : இந்தச் சம்பவத்துக்கு முன்னால் அவர்கள் நபித்துவம் பற்றிப் பேசியதுண்டா ?

விடை : ஒரு வார்த்தை பேசியது கிடையாது.

வினா : நபித்துவத்திற்கு முன்னால் பெருமானார் ஒரு சாதாரண மனிதராகவே வாழ்ந்தார்கள் என்று தானே சொல்கிறீர்கள் ?

விடை : ஆம்—ஆனால் மற்றவர்கள் அனைவரையும் விடப் பெருமானார் பண்பிலும் ஒழுக்கத்திலும் உயர்ந்து நின்றார்கள். அப்போது அரேபிய நாட்டில் நிலவி நின்ற தீய பழக்கம் எதுவும் அவர்களுக்கு வரவில்லை. மூடப் பழக்கத்துக்கும் முட்டாள்தனத்துக்கும் நிலைக்களனாக இருந்த மக்கமா நகரில் பெருமானார் மட்டும் குணத்தின் குன்றாகத் தனித்து நின்றார்கள். அரேபிய மக்கள் மது பானத்திலும் மங்கையர் சல்லாபத்திலும் இன்பம் கண்

PDF ISLAM

டார்கள். இந்த இரண்டுக்கும் அவர்கள் கொடுத்திருந்த முக்கியத்துவம் உலகப் பிரசித்தம் வாய்ந்தது. அக்காலத்திய கவிஞர்களின் கவிதைகள் இன்றைக்கும் நமக்கு முன்னால் நின்று விளக்கம் கொடுக்கின்றன. ஏகத்துவத்தை எடுத்துக் கூறுகிறவர் அனேகமாக யாருமே இல்லை.

இந்தச் சூழலில் வளர்ந்த பெருமானார் ஏகத்துவத்தைப் போதித்தார்கள். தீயவர்களுக்கு மத்தியில் பழகிய பெருமானார் நல்வழிக்கு விளக்கம் கொடுத்தார்கள். கல்லை வணங்குகிறவர்களுக்கு நடுவே தோன்றிய பெருமானார், "கற்சிலை மனிதனின் படைப்பு. மனிதன் எனப்படுபவன் இறைவனின் படைப்பு. எனவே இறைவனுக்குத்தான் அவன் தலைசாய்க்க வேண்டும்" என்று தெளிவாகக் கூறினார்கள்.

சூழ்நிலையே மனிதனின் விதியை நிர்ணயிக்கிறது என்பது பொது நியதி. இது யாருக்குப் பொருந்தினாலும் யாருக்குப் பொருந்தாவிட்டாலும், பெருமானாருக்கு இது நிச்சயமாகப் பொருந்தவில்லை. அவர்களின் விதியைச் சூழ்நிலை நிர்ணயிக்கவில்லை. மாறாக, சூழ்நிலையின் விதியை அவர்கள் நிர்ணயித்து விட்டார்கள். சூழ்நிலையின் சக்திக்கு அடிமைப்படாத அவர்கள் சூழ்நிலையின் ஆற்றலையே வேறு திசைக்குத் திருப்பிவிட்டார்கள். குடிகாரர்களுக்கு மத்தியில் வளர்ந்த அவர்கள் மதுபானத்திற்குத் தடை விதித்தார்கள்.

இறை வணக்கம் என்பது பெருமானாரின் உதிரத்தோடு கலந்துவிட்ட ஒன்று. வழக்கப்படி ஹிரா எனும் குகையில் இறைத் தியானம் செய்துகொண்டிருந்த பெருமானாருக்கு ஒருநாள் இறைச் செய்தி கிடைத்தது. இது எதிர்பாராத ஒரு சம்பவம். இதனைப் பெருமானாரும் எதிர்பார்க்கவில்லை; அவர்களின் உறவினரும் எதிர்பார்க்கவில்லை.

யாருமே எதிர்பாராத இந்தச் சம்பவம் பெருமானாருக்கு அதிர்ச்சியைக் கொடுத்ததில் ஆச்சரியமில்லை. இறைமையின் அரவணைப்பில் அவர்களின் உடல் முழுவதும் குளிர் பரவிற்று. எழுத்துக்கும் விரிவுரைக்கும் கட்

PDF ISLAM

டுப்படாத குழப்பத்துடன் வீட்டுக்கு வந்த பெருமானார் கதீஜா நாயகியிடம் விஷயத்தைச் சொன்னார்கள். "எனக்குக் குளிர் எடுக்கிறது: போர்த்து விடுங்கள்" என்று கூறினார்கள். குகையில் நடந்த அனைத்தையும் கேட்டுத் தெரிந்துகொண்ட கதீஜா பிராட்டியார் தம் கணவருக்கு ஆறுதல் கூறினார்கள்.

"நீங்கள் எதற்கும் கலங்க வேண்டியதில்லை. எல்லாம் நன்மையாகவே முடியும். ஏனெனில் நீங்கள் யாருக்கும் தீங்கிழைத்தது கிடையாது..."

இந்தக் கட்டத்தில்தான் வரகா பின் நவ்பல் நம் சிந்தனைக்கு வருகிறார். அவர் கதீஜா நாயகியாருக்கு நெருங்கிய உறவினர். பெருமானாரையும் அவர் பெரிதும் விரும்பினார். பெருமானாருக்கும் கதீஜா நாயகிக்கும் நடந்த திருமணத்திற்கு அவர் முழு ஆதரவு கொடுத்திருந்தார். விக்கிரக வணக்கத்தை வெறுத்த அவர், உண்மையான மார்க்கத்தைத் தேட ஆரம்பித்து, இறுதியில் கிறிஸ்துவராக உரு மாறியிருந்தார். மதவியலில் அவருக்கு ஆழ்ந்த ஞானமுண்டு என்று அன்னை கதீஜாவுக்கு நன்றாகத் தெரியும்.

எனவே, தம் கணவருக்கு ஏற்பட்ட விசித்திர அனுபவம் குறித்து யோசனை கேட்பதற்காக அன்னை கதீஜா வரகாவிடம் சென்றார். பெருமானாரும் சென்றார்கள்.

பெருமானார் மீது வரகா கொண்டிருந்த அன்புக்கு மற்றொரு காரணமும் உண்டு. பெருமானாரின் அன்னையார் வரகாவின் சகோதரிகளில் ஒருவர். அவருக்கும் அப்துல்லாவுக்கும் நடந்த திருமணம் வரகாவின் முழுத் திருப்தியைப் பெற்றிருந்தது.

பெருமானாரை ஊன்றிக் கவனித்துக்கொண்டிருந்த வரகா இறுதியில் தம் கருத்தைத் தெரிவித்தார்.

"மலைக் குகையில் யாரோ ஒருவர் தோன்றி உங்களை அழுத்திக் கட்டியணைத்தார் என்று கூறினீர்கள் அல்லவா அவர் வேறு யாருமல்ல. உங்களிடம்தான் அவர் முதல் தடவையாக வந்திருக்கிறார் என்றும் நினைக்காதீர்கள். அவர் பெயர் 'நாமூஸ்'. இறைத் தூதர்களுக்கு மெய்ட்டுத்தி

PDF ISLAM

லிருந்து செய்தி கொண்டுவரும் வானவர். அவர் உங்களுக்கு முன்னால் பலரிடம் வந்திருக்கிறார். மூஸா நபிக்கும் ஈஸா நபிக்கும் செய்தி கொண்டு வந்தவர் இவர் தான். உங்களை உங்கள் சமுதாயத்தவர் நாடு கடத்தும்போது நான் உயிரோடிருந்தால் என்னால் இயன்ற உதவியை அவசியம் செய்வேன்.''

வரகாவின் பேச்சு பெருமானாரின் மனத்தில் குழப்பத்தைத் தோற்றுவித்திருக்க வேண்டும். என்னை என் சமுதாயத்தவர் நாடுகடத்தப் போகிறார்களா! அப்படியுமா நடக்கும்?''

வரகா அழுத்தம் திருத்தமாகப் பதிலளித்தார்: ''நிச்சயமாக நடக்கும்; இதில் சந்தேகமே கிடையாது. உலகில் தோன்றிய திருத்தூதர்கள் பலருக்கு இப்படித் துன்பம் ஏற்பட்டிருக்கிறது.''

வரகாவின் வீட்டில் அமைதி நிலவிற்று. தம் தலையில் விழுந்திருக்கும் பொறுப்பு எத்தகையது என்ற உண்மை பெருமானாருக்குத் தெளிவாகத் தெரிந்தது. வரகாவின் வார்த்தையை மறுத்துவிடுவதற்கும் வழியில்லை. ஏனெனில் அவர் தெய்வ நூல்களைக் கரைத்துக் குடித்தவர்; ஹிப்ரு மொழியில் பாண்டித்தியம் பெற்றவர். எனவே ஆதாரமற்ற எதையும் அவர் இவ்வளவு அழுத்தம் திருத்தமாகக் கூறவேண்டியதில்லை. இறுதித் திருத்தூதர் பற்றிய அறிகுறிகளை அவர் ஹிப்ரு மொழியில் இருந்த வேதத்தில் கண்டிருந்தாரா? காணவில்லை என்று நிச்சயமாகச் சொல்வதற்கில்லை.

வரகாவின் குரல் இறுதியாக ஒலித்தது: ''உங்களுக்கு முன்னாலிருக்கும் பொறுப்பு மகத்தானது. அதனை நிறைவேற்றும் வழியில் நீங்கள் எத்தனையோ விதமான எதிர்ப்புகளைச் சமாளிக்க வேண்டி ஏற்படும்; மக்கள் கொடுக்கும் துன்பங்களைத் தாங்க வேண்டி ஏற்படும். என்றாலும் கடைசி வெற்றி உங்களுடையதுதான்.''

வினா: வரகாவை ஏகத்துவவாதிகளில் ஒருவர் என்று கூறுகிறீர்களா?

PDF ISLAM

விடை: ஆம். அவர் விக்கிரக வணக்கத்தை வெறுத்து ஏக தெய்வ வணக்கத்திற்குத் திரும்பினர் என்பதற்குப் பல ஆதாரங்கள் இருக்கின்றன. ஆனால் அவருக்குப் பலதெய்வ வழிபாட்டில் நம்பிக்கை இருந்தது என்பதைக் காட்டுவதற்கு ஓர் ஆதாரமுமில்லை.

வினா: பெருமானாரிடம் அவர் கூறியதை வைத்துப் பார்க்கும்போது. அவரை முதல் முஸ்லிம் என்று நான் குறிப்பிட விரும்புகிறேன். நீங்கள் மறுக்கிறீர்களா?

விடை: ஆம், மறுக்கிறேன். வேண்டுமானால், பெருமானாரின் நபித்துவத்தைத் தெரிந்துகொண்ட முதல் மனிதர் என்று சொல்லுங்கள்; என்றால் மறுக்க முடியாது. தமக்குக் கிடைத்த முதல் செய்தியைப் பெருமானார் கதீஜா நாயகியிடம்தான் முதன் முதலில் சொன்னார்கள். ஆழ்ந்த ஞானமில்லாத காரணத்தினால் கதீஜா நாயகிக்கு உண்மை தெரியவில்லை. எனவே பிரச்சினை வரகாவிடம் சென்றது. அவர் பெருமானாரின் நபித்துவத்துக்கு விளக்கம் கொடுத்தார். அந்த விளக்கத்தின் அடிப்படையில் கதீஜா நாயகிக்கு நம்பிக்கை உருவாயிற்று.

வினா: வரகாவைத் தேடிச் சென்று ஆலோசனை கேட்பதற்கு முன்னால் கதீஜாவுக்குப் அண்ணலார்மீது பிக்கை கிடையாது என்று கூறுகிறீர்களா?

விடை: இல்லை. அண்ணலார் குகை அனுபவம் பற்றிக் கூறிய அனைத்தையும் கதீஜா நாயகி நம்பினார். ஆனால் தம் கணவர் திருத்தூதராகப் போகிறார் என்று கதீஜா நாயகிக்குத் தெரியாது. வரகாவைக் கலந்து விட்டு வந்ததும்தான் நபித்துவத்தில் நம்பிக்கை ஏற்பட்டிருக்க வேண்டும்.

வினா: அப்படியானால் கதீஜாவை முதல் முஸ்லிம் என்று கூறலாமல்லவா?

விடை: தாராளமாகக் கூறலாம். அனைவரும் ஏற்றுக்கொள்ளும் உண்மை இது.

வினா: கதீஜாவின் நம்பிக்கைக்கு வரகாவைக் காரணமாகக் காட்டினால் தவறில்லையே?

விடை: இல்லை.

PDF ISLAM

வினா : அதாவது, அண்ணலாரின் நபித்துவத்தைத் தெரிந்துகொண்ட முதல் மனிதர் வரகா; அண்ணலாரின் நபித்துவத்தை நம்பிய முதல் முஸ்லிம் கதீஜா—இது தானே உங்கள் கருத்து.

விடை : ஆம்.

வினா : இறுதியாக ஒரு சந்தேகம். வரகாவை நீங்கள் ஒரு முஸ்லிம் என்று குறிப்பிட மறுக்கிறீர்களே, காரணம் சொல்ல முடியுமா ?

விடை : வரகாவின் வீட்டில் குகை அனுபவம் குறித்து உரையாடல் நடந்தபோது, அண்ணலாருக்கு ஐந்தே ஐந்து வசனங்கள்தாம் இறைவனிடமிருந்து கிடைத்திருந்தன.

" உமது நாயனின் திருப்பெயர் கொண்டு ஓதுவீராக! —அவன் படைக்கிறான். இரத்தக் கட்டியிலிருந்து அவன் மனிதனைப் படைத்தான், ஓதுவீராக, உமது நாயன் கண்ணியமிக்கவன். அவன் பேனாவினால் கற்றுக்கொடுத்தான். மனிதனுக்கு அவன் அறிந்திராததை எல்லாம் கற்றுக் கொடுத்தான்."

–இந்த ஐந்து வசனங்களே அண்ணலாருக்கு முதன் முதலில் அருளப்பட்டவை. இவை திருக் குர்ஆனில் தொன்னூற்று ஆறாவது அத்தியாயத்தின் துவக்கத்தில் இடம் பெற்றிருக்கின்றன.

இவற்றில் ஏகத்துவமும் இறை வலிமையும் தெரிந்தாலும், தனிப்பட்ட எந்தக் கொள்கையும் காணப்படவில்லை. இந்த இறைச் செய்திக்குப் பின்னர் சிறிது காலம்வரை அண்ணலாருக்கு இறைச் செய்தியே வரவில்லை. இஸ்லாத்தைப் பரப்பவேண்டிய கட்டளையோ இஸ்லாத்தின் கொள்கைகள் பற்றிய விளக்கமோ எடுத்தஎடுப்பில் அண்ணலாருக்குக் கொடுக்கப்படவில்லை.

அண்ணலாருக்கு இறையறிவிப்பு கிடைத்த இரண்டாவது—அல்லது மூன்றாவது ஆண்டு வரகா இறந்துவிட்டார். இதற்குப் பிறகுதான் அண்ணலாருக்குப் பிரச்சாரக் கட்டளை கிடைத்தது ; இஸ்லாத்தின் கொள்கைகள் பற்றிய விளக்கம் கிடைத்தது.

PDF ISLAM

பொங்கிக்கொண்டிருந்த எதிர்ப்புகளிடையே அண்ணலார் தமது பிரச்சாரத்தில் மும்முரமாக ஈடுபட்டிருந்த போது வரகா உயிரோடிருந்தால் நிச்சயமாக அவர்களை ஆதரிப்பார் என்று நம்புவதற்கு இடமுண்டு. ஆனால் இதை மட்டுமே ஆதாரமாக வைத்து அவரை ஒரு முஸ்லிம் என்று குறிப்பிடுவதற்கு வழியில்லை. ஏனெனில் இஸ்லாத்தை ஏற்றுக்கொள்ளாதவர்களும் இஸ்லாத்துக்கு ஆதரவு கொடுத்திருக்கிறார்கள். இந்த இனத்தைச் சேர்ந்தவரே அபூதாலிப். அலி (ரலி) அவர்களுக்குத் தந்தையும் அண்ணலாருக்குப் பெரிய தந்தையுமான அபூதாலிப், இஸ்லாத்துக்குப் பெரிதும் ஆதரவு கொடுத்தார். இதற்கு ஆதாரமுண்டு. ஆனால் அவர் இஸ்லாத்தைத் தழுவினார் என்பதற்கு ஆதாரமில்லை.

வரகா பின் நவ்பலின் நிலையும் இத்தகையதுதான். இஸ்லாம் சம்பந்தமாக அவரது கருத்து எப்படியிருந்தாலும், அவர் இஸ்லாத்தைத் தழுவவில்லை என்பதே பெரும்பாலோரின் கருத்து. இஸ்லாத்துக்கென்று தனிப்பட்ட கொள்கை எதுவும் உருவாகாத நிலையில், பிரச்சாரம் செய்யவேண்டிய கட்டளை அண்ணலாருக்குக் கிடைக்காத நிலையில் ஒரு மனிதர் எப்படித்தான் இஸ்லாத்தைத் தழுவ முடியும் !

எனவேதான் அவர் இஸ்லாத்தைத் தழுவவில்லை என்று நான் குறிக்கிறேன்; அவரை ஒரு முஸ்லிம் என்று குறிப்பிட மறுக்கிறேன். என்றாலும் அண்ணலார் வரகாவை விரும்பினார்கள். இதற்கு அவர்கள் கண்ட கனவு ஒன்று ஆதாரம். வரகாவின் மரணத்திற்குப் பின்னர் இந்தச் சம்பவம் நடந்தது. ''வரகாவை நான் கனவில் கண்டேன். வெண்மையான ஆடை அணிந்திருக்கிறார்...'' என்று அண்ணலார் கூறினார்கள்.

வினா: அண்ணலாருக்கு இறைவனிடமிருந்து செய்தி வந்ததாகக் குறிப்பிட்டீர்கள் அல்லவா? அதைப்பற்றி இன்னும் கொஞ்சம் விரிவாகக் கூறினால் நன்றாக இருக்கும் என்று நான் நினைக்கிறேன். அண்ணலாருக்கு முதன் முதலில் எங்கு, எப்போது இறைச் செய்தி கிடைத்தது?

PDF ISLAM

விடை : மேலே நான் குறிப்பிட்ட ஐந்து வசனங்களே அண்ணலாருக்கு முதன் முதலில் அருளப்பட்ட இறைச் செய்தி. இந்தச் செய்தி, மேலே நான் கூறியது போல், ஹிரா எனும் குகையில், றமலான் மாத இறுதியில் அவர்களுக்குக் கிடைத்தது. அப்போது அவர்களுக்கு வயது 40.

வினு : இறைவனிடமிருந்து ஒரு திருத் தூதருக்கு வரும் செய்தி ஏதேனும் ஒரு குகையில்தான் வரவேண்டும் என்று சட்டம் உண்டோ ?

விடை . இல்லை, இறைவன் எங்கும் இருக்கிருன். அவனுடைய அறிவிப்பு எந்த இடத்துக்கும் வரலாம். என்ருலும், முதல் அறிவிப்பு கிடைப்பதற்கு முன்னர் அண்ணலார் அந்தக் குகையிலேயே பெரும்பாலான நேரத்தைக் கழித்தார்கள். மக்களின் ஆரவாரமும் சந்தடியும் இல்லாத அந்தக் குகை, அண்ணலாரின் தியானத்துக்குப் பெரிதும் துணை புரிந்தது. வழக்கப்படி அவர்கள் தியானம் செய்து கொண்டிருந்தபோதுதான் அந்த இறையறிவிப்பு அவர்களுக்குக் கிடைத்தது.

வினு : அந்தக் குகையைத தவிர்த்து வேறு இடங்களில் அண்ணலாருக்கு இறைச் செய்தி கிடைத்திருக்கிறதா ?

விடை : கிடைத்திருக்கிறது. இதற்குரிய ஆதாரங்கள் வரலாற்று நூல்களில் இறைந்து கிடக்கின்றன. நண்பர்களுடன் உரையாடிக் கொண்டிருந்தபோது—இப்படி எத்தனையோ கட்டங்களில் அவர்களுக்கு இறைச் செய்தி அருளப்பட்டிருக்கிறது. அண்ணலார் மக்காவை விட்டு மதீனுவிற்குச் சென்ற பிறகும் இறைச் செய்தி கிடைத்துக் கொண்டுதான் இருந்தது.

அப்துல்லாஹ் பின் உமர் கூறுகிருர்: "அண்ணலார் ஒட்டகத்தின்மீது பிரயாணம் செய்து கொண்டிருந்த போதுதான் 'மாயிதா' எனும் அத்தியாயம் அருளப்பட்டது. அந்தக் கட்டத்தில் அவர்களின் சுமையைத் தாங்க முடியாமல் ஒட்டகம் நெளிந்தது. எனவே அவர்கள் கீழே இறங்கிக் கொண்டார்கள்."

PDF ISLAM

மாயிதா எனும் இந்த அத்தியாயம் திருக்குர்ஆனில் ஐந்தாவதாக இடம் பெற்றிருக்கிறது.

இறைவனிடமிருந்து திருத்தூதர்களுக்குவரும் செய்திகளைக் குகையுடன் சேர்த்து முடிச்சுப் போட வேண்டியதில்லை என்பதற்கு இது முதல் ஆதாரம். அடுத்து வருவது இரண்டாம் ஆதாரம். அது ஸைது பின் ஸாபித் என்ற நபித் தோழரிடமிருந்து நமக்குக் கிடைத்திருக்கிறது.

“நான் அண்ணலாருக்கு அருகில் உட்கார்ந்திருந்தேன். திடீரென்று அவர்களுக்கு ஒருவித மயக்கம் ஏற்பட்டது. அவர்களின் தொடை என் தொடையில் படிந்தது. அதன் அழுத்தத்தைப் பார்த்தபோது, என் தொடையிலுள்ள எலும்புகளெல்லாம் நொறுங்கி விடுமோ என்று எனக்குச் சந்தேகம் ஏற்பட்டது. சிறிது நேரத்திற்குப் பின்னர் தெளிவடைந்த அவர்கள் என்னைப் பார்த்து, ‘எழுதிக் கொள்’ என்றார்கள். திருக்குர்ஆனில் நான்காம் அத்தியாயத்திலுள்ள 95–ஆம் வசனத்தை அவர்கள் கூற, நான் அதனை அப்படியே எழுதிக்கொண்டேன்.”

வினா: தமக்கு இறைவனிடமிருந்து செய்தி வந்திருக்கிறது என்பதைப் அண்ணலார் எப்படித் தெரிந்து கொண்டார்கள்?

விடை: கிட்டத்தட்ட இதே வினா அண்ணலாரிடமே கேட்கப்பட்டது. அதற்குப் அண்ணலார் கொடுத்த விடையில் முழு விளக்கம் இல்லா விட்டாலும். அந்த ஆத்மீக உலகம் பற்றிய மர்மங்களில் ஒன்றை அது நிச்சயம் வெளியிடும் என்று நான் நினைக்கிறேன்:

“தாங்கள் இறைவனிடமிருந்து செய்தி பெறுகிறீர்கள் அல்லவா?” என்று கேட்டார் நபித் தோழர் அப்துல்லாஹ் பின் உமர்.

“ஆம்!” என்றார்கள் அண்ணலார். “உலோகப் பொருள் ஒன்றைத் தட்டுவது போன்ற ஒலி எனக்குக் கேட்கிறது...”

PDF ISLAM

வேறோரிடத்தில் பெருமானார் இப்படி விளக்கம் கொடுத்திருக்கிறார்கள் : "சிலவேளை எனக்கு இறைச் செய்தி மணியோசையைப் போல் கேட்கிறது. இது மிகச் சிரமமான அறிவிப்பு. அந்த மணியோசை அடங்கியதும் எனக்குப் பொருள் தெரிகிறது. இன்னும் சிலவேளை எனக்கு முன்னால் வானவர் ஒருவர் தோன்றுகிறார்; என்னிடம் பேசுகிறார். அவர் கூறுவதை நான் உணர்ந்து கொள்கிறேன்..."

பிறிதோரிடத்தில் அண்ணலார் தமது அனுபவத்தை இப்படி விளக்குகிறார்கள் : "இளைஞன் ஒருவன் எனக்கு முன்னால் தோன்றி, இறைச் செய்தியை என்னிடம் ஒப்படைக்கிறான்."

தவிர, திருக்குர்ஆனின் இருபத்து மூன்றாம் அத்தியாயத்தின் முதல் வசனம் அண்ணலாருக்கு ஈக்களின் ரீங்காரம் போன்று அருளப்பட்டதாகக் கூறுகிறது திர்மதி. இது நபிமொழி நூல்களில் ஒன்று.

வினா: அப்படியானால், அண்ணலாருக்கு அருளப்பட்ட இறைச் செய்தி எல்லா நேரத்திலும் ஒரே விதமாக வரவில்லை என்பதுதானே உங்கள் கருத்து ?

விடை : ஆம்.

வினா. ஏகத்துவத்தை வலியுறுத்தக் கூடிய அத்தியாயம் ஏதும் திருக்குர்ஆனில் இருக்கிறதா ?

விடை : இருக்கிறது. திருக்குர்ஆனில் 112-ஆம் அத்தியாயமாக அமைந்திருக்கும் இந்தச் சிறிய பகுதி, ஏகத்துவத்தைத் தெளிவாகப் படம்பிடித்துக் காட்டுகிறது. அத்துடன் இறை இலக்கணத்தையும் அது ஓரளவு விளக்குகிறது. 'சூரதுல் இக்லாஸ்' எனப்படும் இந்த அத்தியாயத்தைத் தெரிந்து கொள்ளாத முஸ்லிம்கள் இருக்கமுடியாது.

அந்த அத்தியாயம் ஏகத்துவத்திற்கு இப்படி விளக்கம் கொடுக்கிறது :

"நீர் கூறுவீராக : அல்லாஹ் எனப்படும் அவன் தனித்தவன். அல்லாஹ் எங்கும் நிறைந்தவன். அவன் யாரையும் பெற்றெடுக்கவுமில்லை ; யாராலும் பெற்றெடுக்

PDF ISLAM

கப்படவுமில்லை. அவனுக்கு யாரும் நிகராக இருக்க முடியாது.''

விரு: சரி. இப்போது நம் பிரச்சினைக்கு வருவோம் ஏகத்துவத்திற்கு நீங்கள் படித்தரங்களை உருவாக்குகிறீர் கள் அல்லவா? அவற்றை இப்போது விளக்குகிறீர்களா?

விடை: தாராளமாக! இஸ்லாம் என்பது மனித னின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கென்று இறை வனால் அருளப்பட்ட வேதம். மனிதன் வாழ்க்கை முறை கள் அனைத்தும் அதில் சுத்தமாக விளக்கப்பட்டிருக் கின்றன. இஸ்லாத்தின் கலீபாக்கள் அனைவரும் திருக் குர்ஆனைக் கையில் வைத்துக் கொண்டுதான் ஆட்சி புரிந்தார்கள். திருக்குர்ஆனின் ஒளியில்தான் அவர்கள், மற்றவர்களுக்குத் தெரியாத மர்மங்களை எல்லாம் தெரிந்து கொண்டார்கள்.

என்றாலும் அரேபிய மக்கள் திருக்குர்ஆனை ஏற்றுக் கொள்ள மறுத்தார்கள்; இஸ்லாத்தின் திருத்தூதருக்குத் துன்பம் கொடுக்கத் துணிந்தார்கள்.

நாட்டிலே பரவிக் கொண்டிருந்த புரட்சிக்கு நடுவே பெருமானார் அர்கம் என்ற நபித் தோழரின் வீட்டுக்குள்ளி ருந்து தமது வேலையைச் செய்து கொண்டிருந்தார்கள். இஸ்லாத்தை விரும்பாத அரபியர்கள் பெருமானாரைத் தீர்த்துக் கட்டவும் தயாராக இருந்தார்கள். இதனால் தற் காப்புக் கென்று போராட வேண்டிய அவசியம் முஸ்லிம் களுக்கு ஏற்பட்டது.

இப்படி நாட்டு மக்களிடையே பிளவு தோன்றிய போது, சுயநலம் படைத்த சிலர் முஸ்லிம்களோடு நெருங் கிப் பழகி, எதிர்கட்சிக்குச் செய்தி கொடுத்தார்கள். முஸ் லிம்களுக்கு வெற்றி கிடைத்த போதெல்லாம் அவர்கள் முஸ்லிம்களுடன் இருந்தார்கள். ஏகத்துவத்தை மறுத்த வர்கள் வெற்றியடைந்த போதெல்லாம் அவர்கள் இஸ் லாத்தை எதிர்த்துப் பேசினார்கள்.

இவர்கள் இஸ்லாத்தின் மூலமந்திரத்தை எப்போதும் சொல்லிக் கொண்டிருந்தார்கள். ஏகத்துவத்தில் தமக் குப் பூரண நம்பிக்கை இருக்கிறது என்றும், ஸாத்,

PDF ISLAM

உஸ்ஸா, மனூத் முதலான விக்கிரகங்களைத் தாம் விரும்ப வில்லை என்றும், திருத்தூதர் என்ற முறையில் பெருமானூர்மீது தமக்கு முழு நம்பிக்கை இருக்கிறது என்றும் அவர்கள் முஸ்லிம்களிடம் கூறினுர்கள்.

ஆனல் அவர்கள் எதிரிகளுடன் பழகும்போது, "நாங்கள் முஹம்மதை நம்பவில்லை. என்ருலும் அவரையும் அவரது மார்க்கத்தையும் நாங்கள் கேலி செய்துகொண்டிருக்கிருேம்" என்ருர்கள்.

வினு: இவர்களை முஸ்லிம்கள் என்று நீங்கள் குறிப்பிடுகிறீர்களா?

விடை: இல்லை. 'முனுபிக்' என்று திருக்குர்ஆன் குறிப்பிடுகிறது. முனுபிக் என்ருல், உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசும் வஞ்சகனுக்குப் பெயர். எனவே இத்தகையவர்களை முஸ்லிம்கள் என்று குறிப்பிட முடியாது.

என்ருலும் இவர்கள், "இறைவன் ஒருவனே— அண்ணலார் அவனுடைய திருத்தூதர்" என்று வாயளவிலேனும் கூறுவதால், இவர்களை ஆரம்பப் படித்தரத்திலுள்ள ஏகத்துவவாதிகள் எனலாம். எனினும் இந்தப் பெயரைவிடப் பச்சோந்திகள் எனும் பெயர் இவர்களுக்கு மிகப் பொருத்தமானது. எனவே இவர்களை இத்துடன் நாம் மறந்து விடுவோம்.

அடுத்த படித்தரத்திற்கு வருகிறவர்கள் முஸ்லிம்கள். இவர்கள் ஏகத்துவத்தை வாயால் கூறுவதோடு மனத்தாலும் நம்புகிருர்கள். இறைவன் ஒருவன் தான் என்பதிலோ அண்ணலார் இறுதித்தூதர்தான் என்பதிலோ இவர்களுக்குச் சந்தேகம் கிடையாது. இதனை வெளியில் கூறுவதற்கும் இவர்கள் தயங்குவதில்லை. இவர்கள்தான் முஸ்லிம்களில் அதிகம். இமாம் கஸ்ஸாலி குறிப்பிடுவதுபோல், பாமர முஸ்லிம்கள் அனைவரும் இந்த இனத்தைச் சேர்ந்தவர்களே.

இவர்கள் திருக்குர்ஆனின் ஒளியில் தம் வாழ்க்கையை அமைத்துக் கொண்டிருக்கிருர்கள். பகல் முழுவதும் செயலாற்றுகிருர்கள். ஐங்காலத் தொழுகையில் ஈடுபட்

PDF ISLAM

டிருக்கும்போது அவர்களின் மனநிலை எப்படி இருந்தாலும், பள்ளிவாசலிலிருந்து வெளியே வந்ததும் அவர்களில் பலர் இறைவனை மறந்து விடுகிறார்கள்; அவனன்றி அணுவும் அசையாது என்பதை எண்ணிப் பார்க்கத் தவறி விடுகிறார்கள்.

இவர்களை முஸ்லிம்கள் என்று குறிப்பிடுவதில் எந்தத் தவறும் கிடையாது. என்றாலும், இஸ்லாத்தின் கலீபாக்கள் அடைந்திருந்த படித்தரத்தை இவர்கள் இன்னும் அடையவில்லை என்று துணிந்து கூறலாம். உலகத்திற்கே வழி காட்டிய அந்தப் பெருந்தகைகளின் வரலாற்றைப் பார்க்கும்போது நமக்கு ஆச்சரியமாகத்தான் இருக்கிறது. அவர்களின் சொல்லிலும் செயலிலும் ஆழ்ந்த ஏகத்துவம் தெரிந்தது. அவர்கள் இறை வணக்கத்தில் ஈடுபட்டால், உலகிலுள்ள அனைத்தையும் மறந்து விடுவார்கள். இன்னும் சொல்லப் போனால், அவர்கள் தம்மைக் கூட நினைத்துப் பார்ப்பதில்லை.

வினா : இந்த நபித் தோழர்கள் பாமரர்களைவிடப் படித்தரத்தில் உயர்ந்து நின்றார்கள் என்பது தானே உங்கள் கருத்து ?

விடை : ஆம், அவர்கள் அடைந்திருந்தது மூன்றாம் படித்தரம்; பாமரர்கள் அடைந்திருந்த படித்தரத்திற்கு முற்றிலும் மாறுபட்டது. காணும் பொருள்கள் அனைத்திலும் அவர்கள் இறைவனின் ஆற்றலைக் கண்டார்கள்,

வினா : தொழுகை முடிந்த பிறகு பாமரர்கள் இறைவனை நினைத்துப் பார்ப்பதில்லை என்று கூறினீர்கள் அல்லவா ?

விடை : ஆம். அவர்களில் பலர் தொழுகையின் போதுகூட இறைவனை மறந்து விடுகிறார்கள். இஸ்லாமியச் சட்டப்படி குனிந்து நிமிரும் அவர்கள் தம் மனத்தை வேறு ஏதோ ஒன்றில் செலுத்திக் கொண்டிருக்கிறார்கள்.

வினா : இந்த மூன்றாம் படித்தரத்தவர்கள் தொழும் போது மட்டுமன்றி, தொழுகை முடிந்த பிறகும் இறைவனை எண்ணிக் கொண்டிருக்கிறார்கள் என்று சொல்கிறீர்களா ?

PDF ISLAM

விடை : ஆம்.

வினா : அப்படியானால் அவர்கள் வேறு எந்த வேலையும் செய்ய வேண்டியதில்லையா ?

விடை : உங்கள் வினா என் மனத்தில் ஆச்சரியத்தைத் தோற்றுவிக்கிறது. எப்போதும் இறைவனைப் பற்றியே நினைத்துக் கொண்டிருப்பவர்களால் மற்ற வேலைகளைச் செய்ய முடியாது என்று நினைக்கிறீர்களா? மனிதனின் வேலைகளுக்கு இறைவனைப் பற்றிய எண்ணம் துணை செய்யுமே தவிர, தீங்கு செய்யாது. தவிர, இறைச் சிந்தனையில் ஈடுபட்டிருப்பவர்கள் வேறு எந்த வேலையும் செய்யக்கூடாது என்று எந்தச் சட்டமும் கிடையாது.

இதோ மெஞ்ஞானி ஒருவர் கூறுகிறார் : “ சூபிகள் மார்க்கத்துக்கு முரண்படாத எல்லா வேலைகளையும் செய்யலாம். அவர்கள் கடைவீதிக்குப் போகலாம்; கடையில் உட்கார்ந்து விற்பனை செய்யலாம். ஆனால், ஒரே ஒரு வினாடிகூட அவர்கள் இறைவனை மறக்கக் கூடாது.”

வினா : ‘ சூபிகள் ’ என்றால் யார் ?

விடை : மேற்குறிப்பிட்ட மூன்றாம் படித்தரத்தவர்களையே நாம் சூபிகள் என்று குறிக்கிறோம். உலகில் தோன்றிய—தோன்றுகிற மெஞ்ஞானிகள் அனைவரும் இந்தப் படித்தரத்தைச் சேர்ந்தவர்களே. ‘ அவ்லியா ’ எனப்படும் நல்லறிவாளர்கள் அனைவருக்கும் இது சொந்தமான படித்தரம். இமாம் கஸ்ஸாலி குறிப்பிட்டதுபோல், இது ஆழம் காண முடியாததொரு தலைப்பு. எனவே நாம் இத்துடன் நிறுத்திக் கொள்வது நல்லது.

வினா : ஏகத்துவத்தைத் தவிர்த்து இஸ்லாத்திற்கு இன்னும் பல கொள்கைகள் இருப்பதாகக் கூறினீர்களே. அவற்றை இப்போது விளக்க முடியுமா ?

விடை : மன்னியுங்கள். அவற்றை எல்லாம் இப்போது விளக்குவதற்கு அவகாசமில்லை. அடுத்த தடவை நீங்கள் இங்கு வரும்போது இஸ்லாத்தின் கொள்கைகளைப் பற்றிப் பேசுவோம்.

— * —

PDF ISLAM